பொன்னாங்கணிச் சாறு, கையாந்த கரைச் சாறு, நெல்லிக்காய் சாறு, சிறுகீரைச் சாறு, சவ்ரிக் கொடிச் சாறு, முசுமுசுக்கைச் சாறு, அவ்ரிச் சாறு, நொச்சிலைச் சாறு, பாப்பைக் கிழங்கு சாறு, நன்னாரி வேர்ச் சாறு, கருங்காக்கணை சாறு, ஆலம் விழுதச் சாறு, தாழை விழுதச் சாறு, தாமரை கிழங்குச் சாறு, இது வெல்லாம் வகை ஒன்றுக்கு படி ஒன்று, பால் படி இரண்டு, நெல்லிக்காய்ச் சாறு படி நாலு, சீனிக் கடைச் சரக்கு ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, அதிம[illegible]

செங்கள நீர், கோஷ்டம், சீரகம், சாதிக்காய், சாதிபத்திரி, பச்சிலை, சிறு நாகப்பூ, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், மருக்கொழுந்து பூலாங் கிழங்கு சிறு செண்பகப்பூ, வலவள்ளை யரிசி, சந்தனம், மகிழம் பூ, சதகுப்பை, இவை வெல்லாம் இளநீர் விட்டு அரைத்து கரைத்து நல்லெண்ணை படி அரை கூட்டி வடித்துக் கொள்ளவும்.

இதைக்கு தீரும் வியாதி கால், கை எரிப்பு, தலை சொறி, தினவு உடல் சுரம், நேத்திர வியாதி தலை மயிர், உதிர்தல், செம்பட்டை மயிர், சுருட்டு மயிர் கண்ணெரிச்சல் பித்தத்துடன் கூடின வியாதி யெல்லாம் தீரும். சாஸ்திரப் பிரகாரம்.

மண்டை வியாதிக்கு தைலம் வகை:-

பசுவின் எருமை நாபி, முலைப் பால் உரி, நார்த்தங் காய்ச் சார், கார்போக அரிசி, நார்த்தங் காயில் புடமிடவும். திரிகடுகு, திரிபலை, அதிமதுரம், ஏலம் விளாமிச்சன் வேர், சாதிக்காய், கோஷ்டம், வெட்டி வேர் இவை வெல்லாம் அரைத்து பதத்தில் வடித்து நசியம் பண்ணவும்.

மகாபூதிகாதி தைலம்:-

அகில் பட்டை புற இடித்து நாலு வள்ள தண்ணீர் ஆறு வள்ளமாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு. வெட்டு மூலிகை, மலைதாங்கி வேர், சாரணைக் கிழங்கு, சிற்று முட்டி வேர், வெள்ளை வெங்காயம், சவரிக் கொத்து மாவிலிங்கப் பட்டை எருக்கம் வேர் கொடிவேலி வேர், ஊமத்தை வேர் இவை ஒவ்வொன்று பலம் ஆறு இடித்து பன்னிரண்டு வள்ள தண்ணீர் விட்டு மூன்று வள்ளமாய்க் காய்ச்சிக் கொண்டு முன் கசாயமும் ஒன்றாய் விட்டுக் கொண்டு தேங்காய்ப் பால் படி பனிரெண்டு கொள்ளு மூன்று வள்ளம் வேக வைத்த கசாயம் படி பனிரெண்டு செம்பருத்தி இலைச் சாறு படி நாலு, நொச்சிச் சாறு படி நாலு, தாமரைச் சாறு படி நாலு, கையாந்த கரைச் சாறு படி ஆறு, நல்லெண்ணை படி ஆறு, இலுப்பை எண்ணை படி இரண்டு, வேப்பெண்ணை படி இரண்டு, புன்னெண்ணை படி இரண்டு, கடுகெண்ணை படி இரண்டு, இனி கற்கம், சிற்று முட்டி வேர், நொச்சி வேர், அமுக்கிராம் வேர், நில உகா வேர், முள்ளி வேர், கண்டங்கத்திரி வேர், நாயுருவி வேர், கோரை கிழங்கு பேய்க் கொமட்டி வேர், காட்டு முருங்கை வேர், தாழுவளை வேர் இவை வெல்லாம் வேர் பலம் ஒன்று இடித்து நாள் பண்ணிக் கொள்ளவும். கடைச் சரக்கு ஆனை வசம்பு, வாய் விளங்கம், யெவாச் சாரம், சத்திச் சாரம் சடாமஞ்சி, பூலாங் கிழங்கு, சிறு நாகப்பூ, குக்கிலம், கருந் துளசியம் கோஷ்டம், அதிமதுரம், நல்ல சந்தனம், ரத்தச் சந்தனம், சீரகம், கருஞ் சீரகம், மஞ்சிட்டி, அக்கி, திப்பிலி பெருங்காயம், கண்டு பறங்கி, நெல்லிக்காய், கெந்தகம் தான்றிக்காய், வெண்கடுகு, வேப்பம் விரை, பஞ்சலவணம், ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, கடுகுரோகணி, சதகுப்பை, தேவதாரம் வசம்பு, திரிகடுகு இவை ஒவ்வொன்று பலம் ஒன்று இவை வெல்லாம் இடித்து நாள் பண்ணி கசாயம் விட்டரைத்து எருக்கன் பால் படி அரை இவை எண்ணை பால் கசாயம் கடைச் சரக்கு எல்லாம் ஒன்றாய் விட்டு மூன்று நாள் ஒன்றாய்க் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு அந்த வெதுப்பத்திலே ரச பற்பம் பலம் ஒன்று காரீய செந்தூரம் பலம் ஒன்று இந்த பற்பம் சேர்த்து தானியத்திலே நாற்பது நாள் வைத்துக் கொண்டு மேலும் இட்டு பிடிக்கவும். நசியம் பண்ணலாம். இதற்கு தீரும் வியாதி வாதம் எண்பது சரீரத்திலிருக்கும் நாற்பது வகை பைத்தியம், இருபது வகை சிலேஷ்மம், கால் கை முடக்கம் ஜன்னி வாதம் சகல வியாதியுந் தீரும். கை கண்டது.

உபாசிய லேகியம் வாயுவுக்கு தாளிச வடகம்:-

தண்ணீர் படி அரை, பால் படி இரண்டு, வெல்லம் படி இருபத்திரண்டு, இவை வெல்லம் பாகாய்க் காய்ச்சி இதில் ஏலம் வால்மிளகு வையரிசி, வாயுவிளங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி சீரகம், ஓமம், கையாந்த கரைப் பொடி, லவங்கப் பட்டை, கிராம்பு, தக்கோலம் இவை வெல்லாம் வகை ஒன்றுக்கு பலம் அரை இடித்து சூரணம் பண்ணி சதகுப்பை பலம் முப்பத்தைந்து, கொத்தமல்லி பலம் ஒன்றரை, சுக்கு பலம் நாலு இதுவும் சூரணம் பண்ணி லேகியம் பண்ணி பதத்தில் இறக்கிவும். குசிகா வாயுவும், காய்ச்சல், கவுசை, வயிறு பொருமல் வெக்கட்டு, பாண்டு காமாலை இவை வெல்லாம் தீரும்.

தாளிச வடகம் :-

சுக்கு பலம் ஒன்று, திப்பிலி மூலம் பலம் அரை, திப்பிலி பலம் அரை, தாளிச பத்திரி பலம் அரை, சிறுநாகப்பூ பலம் அரை, மிளகு பலம் அரை, ஏலம் பலம் கால் செவியம் பலம் கால், லவங்கப் பட்டை பலம் கால், லவங்கப் பத்திரி பலம் கால், விளாமிச்சன் வேர் பலம் கால் இது வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி சூரணம் ஒரு பங்கும் வெல்லம் மூன்று பங்கும் கூட்டி இடித்து உருண்டை உருட்டவும். இதற்கு தீரும் வியாதி வாய்வு, அஸ்தி சுரம், பயித்தியம் சகலமும் தீரும்.

வில்வாதி லேகியம் :-

வில்வ வேர் பலம் மூன்று பதிரு, வெள்ளத் தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி சவும். வெல்லம் பலம் மூன்று பாகு பக்குவமாய் காய்ச்சி அதில் சுக்கு பலம் மூன்று, சீரகம் பலம் ஒன்றரை, சிறு நாகப்பூ பலம் ஒன்றரை, ஏலம் பலம் கால், லவங்கப் பட்டை பலம் கால், லவங்கப் பத்திரி பலம் கால், மிளகு பலம் ஒன்று, திப்பிலி பலம் ஆறு, செவியம் பலம் ஒன்று, தாளிச பத்திரி பலம் ஒன்று, திப்பிலி மூலம் பலம் ஒன்று, சித்திர மூலம் பலம் ஒன்று இது வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி லேகியத்தில் போட்டு கம்பிப் பண்ணி லேகியத்தில் போட்டு கம்பிப் பதத்தில் இறக்கவும். இறக்குகிற போது வேண்டிய தேன் விட்டுக் கொள்ளவும். இதற்கு தீரும் வியாதி பயித்தியம் கை கால் எரிப்பு, வயிறு பொருமல் ஆரோசிகம் உஷ்ண சிரமத்துடனே கடினமும் தீரும். அறிந்து கொள்ளவும்.

காச சுவாசத்திற்கு கண்டங்கத்திரி கற்கம் :-

முள்ளி, கண்டங்கத்திரி, தூதுவளை, மிளகரணை, வேலிப்பருத்தி, மணத்தக்காளி, எருமை நாக்கு, சங்கன் குப்பி யிலை, துளசி செருப்படி இலை, பொன்னாங்கண்ணி நராய், குமரி நராய், சிறு கீரைத் தாளி இலை, தேள் கொடுக்கு பிரண்டை கலியாண முருங்கை சாய வேரு, வனமூலிகை வகைக்குச் சாறு, நாழி கடைச் சரக்கு திப்பிலி, திப்பிலி மூலம், ஆனைத் திப்பிலி, கற்கட சிங்கி, தாளிச பத்திரி, செவியம், இலவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, ஏலம், சிறுதேக்கு, சன்னராஷ்டகம், வாய்விளங்கம், கஸ்தூரி மஞ்சள், விராம்பு, சாதிக்காய், சுக்கு, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், மஞ்சிட்டி, நாகேசுரம், செங்கிள நீர் கோஷ்டம் வகைக்கு விராகனிடை மூன்று இந்தக் கடை மருந்தெல்லாம் பசுவின் பால் விட்டரைத்து இந்த வன மூலிகைச் சாற்றிலே கலக்கி ஒரு நாள் சூரிய புடம் வைத்து மறு நாள் எடுத்துக் காய்ச்சி கற்கமான பாகமிறக்கவும். எட்டு நாள் தானிய புடம் வைக்கவும். தினம் ஒரு கரண்டி கொள்ளவும். இதற்கு தீரும் வியாதி காசம், பஞ்ச காசம், உழ்மாந்தம், சுவாச காசம், சிரோபாரம், சூலைகளெல்லாம் தீரும்.

திப்பிலாதி ரசாயனம் :-

திப்பிலி பலம் பத்து, சர்க்கரை பலம் இருபது, தேன் படி இரண்டு, கரும்பின் பால் படி இரண்டு, பசுவின் பால் படி இரண்டு, நெய் படி இரண்டு, சாவேரி படி இரண்டு, நிலப்பனங் கிழங்கு சாறு படி இரண்டு, இது வெல்லாம் கூட்டி பானையிலிடவும். மேல் ஔஷதம் நல்ல சந்தனம், பெரும்புளு வேரு, லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி மூலம், சித்திர மூலம், மண்டூரம், அப்பிரகம், நாகபற்பம், அயபற்பம், கண்டங்கத்திரி வேர், சிறுவழுதிலை வேர், தேங்காய், லவங்கப் பட்டை, தேத்தான் கொட்டை, கோரை கிழங்கு வகை யொன்றுக்கு விராகனிடை இரண்டு சூரணம் பண்ணி இந்த சூரணத்திலே கஷாயம் விட்டு லேகியம் பக்குவமாயிறக்கவும். ஆறின போது தேன்விடவும். இதற்கு தீரும் வியாதி அன்ன பித்தம், சுவாச காசம், க்ஷயரோகம், குன்மம் மேகசுரம், சாமாலை, பாண்டு பகர் சுத்த பைத்தியம் தீரும். பத்தியம் உப்பாகும்.

தாளிச வடகம் மாதுளங்காய் லேகியம், ஏலாதி கிருதம் ஈளைக்கு :-

தாளிச பத்திரி பலம் ஒன்று, செவியம் பலம் ஒன்று, மிளகு பலம் ஒன்று, திப்பி

திப்பிலி மூலம் பலம்இரண்டு, திப்பிலி பலம் இரண்டு, சுக்கு பலம் ஒன்று, சிறுநாகப்பூ பலம் ஒன்று, ஏலம் பலம் கால், லவங்கப் பட்டை பலம் கால், லவங்கப் பத்திரி பலம் கால், நாகேசுரம் பலம் கால், விளாமிச்சன் வேர் பலம் கால் இது எல்லாம் நன்று யிடித்து சூரணம் பண்ணி இந்தச் சூரணம் ஒரு பங்கும் வெல்ல மிரண்டு பங்கும் வெல்லத் திரைப்படி தண்ணீர் விட்டுக் கிளறி தளச்சி பெருமன் உருண்டை பண்ணி புதுச் சட்டியில் போட்டு வைக்கவும். இது வாயுவுக்கு பித்த சிலேஷ்மத்துக்கும் மற்று முண்டான வியாதிக்கும் குணம். வியாதி அரோசிகம் சகலமும் தீரும்.

மாதளம் பழச் சாறு ஒரு நாழி, இஞ்சிச் சாறு, பசினிக் கண்ணீர், வாயுவிளங்கம் செவியம் ஏலம், அசுமதாகம் பொடி செய்து நெய் கலந்து காய்ச்சி திங்கவும். பயித்திய ரோகம், பாண்டு, காச சுவாசம் தீரும்.

ஏலாதி கிரதம்:-

அகத்திச்சூல் அரசு, இஞ்சில் ஒவ்வொன்று முற்றிச் சிவந்த பட்டை எட்டு பலம் இடித்து குழி நீர் விட்டு எட்டொன்றாய் காய்ச்சி வடித்து இதில் வெள்ளருகு சாறு படி இரண்டு நெய் படி இரண்டு அகத்தி முகிள், ஆலமுகிள், அரசன் முகிள் மகிழம், கோஷ்டம் சந்தனம், இலுப்பை தாமரை வளையம் செங்கழு நீர்க் கிழங்கு, பேரீச்சன் பழம், வெள்ளறுகு வேர், செண்பக மொட்டு, ஏலம், லவங்கப் பத்திரி, நாகப் பூ, நாவல் தாழம் பச்சிலை, தக்கோலம் நெய்தற் கிழங்கு, அமுக்கிரா வேர், நன்னாரி வேர் ஒவ்வொன்றும் பலம் ஒன்று பால் விட்ட அரைத்து கலந்து நன்றாகக் காய்ச்சி ஐந்தாம் நாள் வடித்துக் கொள்ளவும்.

ஈளை, இருமல், எலும்புருக்கி, ரத்த பித்தம், உடம்பு உலருதல் தீரும். இந்தப் படி நெய் விடாமல் நல்லெண்ணை விட்டுக் காய்ச்சிக் கலகிட பிளவை கிரந்தி நீரழிவு உழலை, ஊறல், கை கால், உடம்பெரிப்பு தீரும். இது நெய் கூட்டினால் கிருதம் எண்ணை கூட்டினால் தைலம்.

கண்டங்கத்திரி நெய்:-

கண்டங்கத்திரிச் சாறு நாலு, பசுவின் நெய் இரண்டு, சாரணை வேர், சிறுகாஞ்சரி வேர், தாளிச பத்திரி, கீழாநெல்லி, சிறு தேக்கு, அரத்தை நெருஞ்சி வேர், பாலையரிசி ஒவ்வொன்றும் பலம் நாலு அரைத்து கலந்து வடித்துக் கொள்ளவும். சர்வ காசமும் தீரும்.

கூஷ்மாண்ட கிருதம், ரசாயனம்:-

பூசனிக்காய் சிறுகச் சிறுக நறுக்கி உலர்த்தினது பலம் நாலு இது நெய் வார்த்து பொன்னிறமாய் கருகாமல் வறுத்து இடித்துக் கொண்டு பிறகு கடைச் சரக்கு ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, திப்பிலி மூலம், கொட்டி கிழங்கு, செவியம், நன்னாரி வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், நற்சீரகம், நிலப்பனைக் கிழங்கு, கோரை கிழங்கு, கொத்தமல்லி, சாதிக்காய், சாதிபத்திரி, வாயு விளங்கம், முந்திரிகைப் பழம், தண்ணி விடாங் கிழங்கு, விளாமிச்சம் வேர், பற்பாடகம், கூகை நீர், அமுக்கிரான், கிழங்கு குடப்பாலைப் பட்டை இது ஒவ்வொன்றும் பலம் இரண்டு கட்டித் தூளா இடித்து வஸ்திர காயம் பண்ணி எடுத்துக் கொண்டு இதற்கு இரட்டிப்பு சர்க்கரை நிறுத்து ஒரு பானையில் பசுவின் பால் படி நாலு, சர்க்கரையும் போட்டுக் காய்ச்சினால் தம்பி போலே வரும். அப்போ இந்த மருந்து போட்டு கிளறி பிறகு நெய் படி எட்டு தேன் படி எட்டு விட்டு கிளறி பானையிலே கட்டிக் கொண்டு இரண்டு தேசகாலம் கொள்ளவும். இதற்கு தீரும் வியாதி அஸ்தி சுரம், பைத்தியம், கால் கை எரிப்பு, எலும்புருக்கி போம். சரீரம் பருத்து வருவதற்கும் பத்தியம் பயத்தப் பருப்பு, சிறுகீரை, வாழைக்காய், முருங்கை இலை, பொன்னாங்கண்ணி, பூசனிக்காய் பால், நெய் உப்பு, மிளகு இது கூட்டவும். காரப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

குன்ம வாயுவுக்கு குன்ம வாயுவுக்கு மருந்து:-

வெள்ளை வெங்காயம் பலம் பத்து, சித்திர மூலம் பலம் ஒன்று, ஓமம் பலம் ஒன்று, சதகுப்பை, செவியம், கல்லுப்பு, இந்துப்பு வெடியுப்பு வளையலுப்பு உவருப்பு,

சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், சத்தி சாரம், எவாச்சாரம், திப்பிலி மூலம், தேசாவரம், செங்கிரா நீர், கோஷ்டம் இது வெல்லாம் சூரணம் செய்து வெள்ளை வெங்காயத்தில் போட்டு நன்றாய் அரைத்து குளிகை கழச்சி மருவாதி செய்யவும். அண்ட வாய்வும் தீரும்.

<u>குன்ம வாயுவுக்கு:-</u>

சத்திச் சாரம், எவாச்சாரம், வெங்காரம், சவுக்காரம், சீனிக்காரம், அட்டுப்பு, கல்லுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, சங்கு சுட்ட சாம்பல், நாயுருவி உப்பு, சித்திர மூலம் உப்பு, புளியந் சாம்பல், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், வசம்பு பெருங்காயம், திப்பிலி மூலம், செவியம், தாளிச பத்திரி, சிவதை, கடுகுரோகணி, சிறுதேக்கு, வாய்விளங்கம், கொத்தமல்லி இது வெல்லாம் வகை யொன்றுக்கு பலம் கால் விழுங்காடு சுட்டிச் சூரணம் செய்து கொள்ளவும். இந்தச் சூரணத்தில் விரல் கடிப் பிரமாணம் எடுத்து இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும் வாயுவும் தீரும்.

<u>குன்மத்துக்கு அகோரக் குளிகை:-</u>

எருக்கன் சாம்பல், கள்ளிச் சாம்பல், புளியம் பட்டைச் சாம்பல், புரசம் பட்டைச் சாம்பல், எவச்சாரம், திப்பிலி மூலம் காக்காய்ச் சிப்பிச் சாம்பல், ஆற்றுச் சங்குச் சாம்பல், குவளைச் சாம்பல் ஆக வகை யொன்றுக்கு பலம் அரை சகம்பல் - ஈக முலைப்பால், சரகுச் சாம்பல் பலம் இரண்டு பெருங்காயம், திப்பிலி சுக்கு, மிளகு, கொடிவேலி வேர் பட்டை, ஓமம், பாறையுப்பு, கல்லுப்பு, இந்துப்பு வளையலுப்பு இது வெல்லாம் வகைஒன்றுக்கு பலம் அரை இது வெல்லாம் சூரணம் செய்து எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து இஞ்சிச் சாறு விட்டரைத்து ஒரு நாள் இலந்தக் கொட்டைப் பிரமாணம் குளிகை செய்து அநுபானம் தேன், நெய், சுக்கு கசாயம், பஞ்ச லோக கசாயத்தில் கொடுக்க குன்மம் தீரும்.

<u>தாப சுர இச்சி:-</u>

சாதிலிங்கம் விராகனிடை ஒன்று, வெங்காரம் விராகனிடை ஒன்று, கற்பூர சிலாசத்து விராகனிடை ஒன்று, கற்பூர சிலாசத்துக்கு சுத்தி ஊசிக் காந்தம் அரைத்து காடியிலிட்டு அரைத்து புடம் போடவும். இவை எல்லாம் எலுமிச்சன் சாற்றில் அரைத்துக் குளிகைக் கூட்டவும். தாப சுரத்துக்கு வெந்நீரில் கொடுக்கவும்.

<u>தைல வகை நூக்கிபுலினெழுக்குச் சுத்தி தைலம்:-</u>

கஞ்சாச் சாறு படி நாலு, அரத்தை பலம் இருபத்தைந்து, சுக்கு பலம் பதினைந்து, மிளகு பலம் முப்பது, ஓமம் பலம் பத்து, இது வெல்லாம் இடித்து கசாயம் போட்டு பதினாறு வள்ளத் தண்ணீர் விட்டு இரண்டு வள்ளமாக இறுக்கக் கொள்ளவும். அதன் பிறகு ஆயப் பட்டை பலம் ஐம்பது, நொச்சி வேர் ஐம்பது, கழுதாவளை வேர் ஐம்பது, காட்டாமணக்கு வேர் ஐம்பது குன்றினிப் பட்டை பலம் ஐம்பது, வேப்பம் பட்டை பலம் ஐம்பது, மலை வேம்பு பலம் ஐம்பது, குருவிச்ச வேர் பலம் ஐம்பது, வெள்ளைச் சாரணை வேர் பலம் ஐம்பது, சித்தா முட்டி வேர் பலம் ஐம்பது, கொடி வேலி பலம் நாற்பத்தைந்து, செம்புளிச் சார் வேர் பலம் ஐம்பது சவுரி வேர் பலம் ஐம்பது; வேளை. வேர் பலம் ஐம்பது, சாரணை வேர் பலம் ஐம்பது ~~[illegible]~~ இது வெல்லாம் இடித்து கசாயம் போட்டு பதினாறு வள்ளத் தண்ணீர் விட்டு நாலு வள்ளமாய் இறக்கிக் கொள்ளவும். கடைச் சரக்கு சதகுப்பை பலம் பத்து, திப்பிலி மூலம் பலம் பத்து, பூலாங்கிழங்கு பலம் பத்து இதுவும் இடித்து கசாயம் போடவும்.

(வேறு) வெற்றிலைச் சாறு படி இரண்டு, வெற்றிலை கொடி படி இரண்டு, கழுதாழைச் சாறு படி ஒன்று, கையான் தகரைச் சாறு படி ஒன்று, நொச்சிச் சாறு படி ஒன்று கொம்மட்டி மாதளம் பழச் சாறு படி ஒன்று, சாரணை இலை சாறு படி ஒன்று, இதுவும் கூட விட்டு கடைச் சரக்கு திப்பிலி, கருஞ்சீரகம், நல்ல சீரகம், பச்சிலை,

கரிசால், செங்கழு நீர், கோஷ்டம், தேவதாரம், மரமஞ்சள், லவங்கப் பட்டை,
லவங்கப் பத்திரி, தக்கோலம், நன்னாரி வேர், செண்பகப்பூ, வெட்டி வேர், விலா
மிச்சம் வேர், கோரை கிழங்கு, தாமரை வளையம், செங்கழு நீர்க் கிழங்கு பலம் பனிரெண்டு
என்னை படி இரண்டு கடுகு ரோகணி பலம் ஒன்று, நெரிவிஷம் பலம் ஒன்று, கிராம்பு பலம்
ஒன்று, தான்றிக்காய் பலம் ஒன்று, கடுக்காய் பலம் ஒன்று, இந்துப்பு பலம் ஒன்று,
நேர்வாளம் ஐந்து ஆக பாதி ஒரு கழஞ்சும், எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து பாவட்டங்
காய் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி ஒரு உருண்டை குளிர்ந்த தண்ணீரில் கொடுக்க
வும். அதிகமாய் எடுத்தால் வெண்ணீர் குடிக்க நிற்கும். காட்டா மணக்கு கிழங்கு கிருக
கருக்கி எருமைப் பாலில் வேக வைத்து நிழலிலுலர்த்திக் கொண்டு இதை சீவ வெட்டிப் பாக்கு
வெற்றிலையுடன் தின்ன வயறு கழியும். இதுக்கு மாற்று மோருஞ் சோறும்.

<u>சுக விரோசனத்துக்கு:-</u>

ரசம் ஒன்று, வெண்காரம் ஒன்று, இந்துப்பு ஒன்று, கெந்தகம் ஒன்று, கடுக்
காய் ஒன்று, தான்றிக்காய் ஒன்று, நெல்லிப் பருப்பு ஒன்று, சுக்கு ஒன்று, திப்பிலி ஒன்று,
மிளகு ஒன்று, நேர்வாளம் பத்து இவை எல்லாம் கூட்டிக் கடுக்காய் கஷாயத்தில் அரைத்து
குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி புளியங் கொட்டைத் தோல் கஷாயத்தில் ஒரு உருண்டை
கொடுக்கவும் வயிறு கழியும்.

<u>நேர்வாளம் சுத்தி:-</u>

நேர்வாளம் சீலையில் வைத்து எருமைச் சாணி ஒரு சட்டி குழம்பு போல் கரைத்து
பொட்டணம் போட்டு ஒரு சாமம் எரியிட்டு வெந்தபிறகு எடுத்து ஓடு தள்ளி உள் பருப்பை வாங்கி
கழுவி கற்றாழை மணிச் சாற்றில் இரண்டு நாழிகை புடம் இடவும். சோறு கரைத்த தண்ணீரில்
புடமிடவும். வெல்லத் தண்ணீரில் புடமிடவும். பசுவின் பாலில் புடமிடவும். புளியில் புடமிடவும்.
பசுவின் வெண்ணெயில் புடமிடவும். புடத்துக்கொரு கால் கழுவிப் போடவும். சுத்தியாம்.
அந்தப் பருப்பு சுக்குப் பொடியில் முடித்துக் கொள்ளவும்.

<u>பச்சை நாபி சுத்தி:-</u>

பச்சை நாபியை பாக்குப் பிளவு போலே நறுக்கி ஆட்டு மூத்திரத்திலாவது
கோசலத்திலாவது மூன்று நாள் ஊறப் போட்டு கழுவி உலர்த்திப் போட சுத்தியாம். பின்னை
யும் வெட்டின நாபியை எலுமிச்சன் சாற்றில் நனையப் போட்டு கழுவி உலர்த்தி எடுக்க
சுத்தியாம். இந்தப்படி நாபி சுத்தி அறியவும்.

<u>ரச சுத்தி:-</u>

அவிஞ்சி வேர் பட்டை மருந்துக்கு சுத்தியாம். கொடிவேலி பட்டைச் சூரணம்
மருந்துக்குச் சுத்தியாம். கொன்றை வேர் பட்டை சூரணத்தில் மருந்துக்கு சுத்தியாம். கற்றாழை
வேர் சூரணத்தில் மருந்துக்குச் சுத்தியுள்ள ஏழு புரையும் தீரும். இரசம் கற்குழியில்
வார்த்து இரண்டு நாழிகை அரைக்கவும். அப்பால் ஒரு விராகன் ரசத்துக்கு ஒரு பணவிடை
அட்டுரைக் கலந்து வெயிலிலேஉலர்த்தி மெல்லிய சீலையிட்டு பிழிந்து கொண்டு ரசம் கற்குழியில்
வார்த்து நற்சந்தனச் சாறு வெற்றிலைச் சாறு பாகலிலைச் சாறு நிலப்பனங் கிழங்குச்
சாறு, கோவையிலைச் சாறு, வேலிப் பருத்திச் சாறு, தும்பை பட்டைச் சாறு,
கொடிவேலிப் பட்டைச் சாறு, பொன்னுவரைப் பட்டைச் சாறு பொன்னூமத்தைப் பட்டைச்
சாறு, கையாந்தகரையிலைச் சாறு, கற்றாழை இலைச் சாறு இந்த இலைச் சாற்றில்
வகையில் இரண்டு நாழிகை அரைக்க ரசம் சுத்தியாம்.

<u>அரிதார சுத்தி:-</u>

ஒன்றிரண்டாக பொடித்து மெல்லிய சீலையில் கட்டி அதின் மேல் ரட்டை மடிப்பு
பெருஞ்சீலையில்முடிந்து கோமூத்திரத்தில் தொளந்திரத் தீயில் மூன்று நாள் கமலாக்கினியில்
எரியிட்டு எடுக்க அரிதாரம் சுத்தியாம்.

<u>மஞ்சேசிலை சுத்தி: பாஷாண சுத்தி:-</u>

மஞ்சேசிலை ரட்டை மடிப்பு சீலையில் முடிந்து ஆட்டு மூத்திரத்தில் கொளாந்திரத்தில் இரண்டு நாழிகை கடுந் தீ எரியிட்டு இறக்க மஞ்சேசிலை சுத்தியாம்.

எலி பாஷாணத்துக்கு சுண்ணாம்பு தண்ணீரில் கொளாந்திரத்தில் கமலாக்கினி ஒரு நாள் எரியிட்டு இறக்கவும் சுத்தியாம்.

<u>கௌரி பாஷாண சுத்தி:-</u>

எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து உருட்டி இரட்டைச் சீலையில் முடிந்து கொளாந்திரத்தில் வைத்து சுண்ணாம்புத் தண்ணீரில் இரண்டு சாமம் எரியிட்டு இறக்க சுத்தியாம். இந்த சுத்தி பாஷாணத்துக்கும் ஆகும்.

<u>சாதிலிங்க சுத்தி:-</u>

முலைப்பாலிலாவது, எலுமிச்சம் பழச் சாற்றிலாவது அரைக்க பாலில் வண்டு கடி இலையின் மேல் வைத்து மண் செய்து எரியிட்டிறக்கச் சுத்தியாம்.

<u>வெங்கார சுத்தி பச்சைத் துத்த சுத்தி:-</u>

வெங்காரத்தைக் கழுவிப் போக்கச் சுத்தியாம். பச்சைத் துத்தம் கயிர் மேல் தண்ணீர் வாராது அரைத்து புதக் கொட்டியில் சட்டி போல் தட்டி இரண்டு புடமும் சுட பச்சைத் துத்தம் சுத்தியாம்.

<u>பால் துத்தம் சுத்தி: கெந்தக சுத்தி:-</u>

சுண்ணாம்புத் தண்ணீரில் இரண்டு நாழிகை கமலாக்கினியாக எரியிட்டு இறக்க பால் துத்தம் சுத்தியாம்.

கெந்தகத்தைப் பொடியாக்கி ஆமணக்கெண்ணெயை இருப்புச் சட்டியில் விட்டு இரண்டு நாழிகை கமலாக்கினியாக எரியிட்டு பசுவின் பாலில் பச்சைப் பாலில் வார்க்க சுத்தியாம்.

அல்லது: வெள்ளாட்டு பாலில் வேக வைத்தாலும் சுத்தியாம்.

<u>ஆமணக்கம் பால் சுத்தி குங்கிலியம் சுத்தி:-</u>

காட்டாமணக்கம் பால் தெளித்து இளநீரில் வேக வைத்து சுத்தியாம்.

குங்கிலியம் ஒன்றிரண்டாய்ப் பொடித்து சீலையில் கட்டி திரிபலை குடிநீரில் கொளாந்திரத்தில் வைத்து ஒரு சாமம் எரியிட்டு இறக்கக் குங்கிலிய சுத்தி.

<u>லவண சுத்தி, காந்த சுத்தி:-</u>

லவணம் காடியில் இரு நாள் ஊறப் போட சுத்தியாம்.

அல்லது

வெள்ளாட்டு மூத்திரத்தில் இரண்டு நாழிகைக்கு மேல் வைக்க சுத்தியாம். காந்த மூன்றுக்குஞ் சுத்தி: எலுமிச்சம் பழச் சாற்றில் இரண்டு நாழிகை ஊறப் போட சுத்தியாம். சோறு தெளிவில் இரண்டு நாழிகை ஊறப் போட சுத்தியாகும்.

<u>அரிதாரச் செந்தூரம்:-</u>

தகட்டு அரிதாரங் கொண்டு வந்து சீலையில் பொட்டணம் கட்டி குறணி காடி ஒரு பானையில் வார்த்து தளாந்திரங் கட்டி காடி வைத்தாலும் தீ யெரிக்க வத்தின பிறகு எடுத்துக் குழலில் பொட்டு காற்றிலுலர்த்தி எடுத்து பிறகு சித்தாமணக்கு இலைச் சாற்றிலே தளாந்திரங் கட்டி அந்த சாறு வைத்தாலும் தீ யெரித்து எடுத்து நிழலில் உலர்த்தி சரக்குக்கு கூட்டிக் கொள்ளவும்.

<u>பொன்னரிதாரம்:</u> இதில் துளசிச் சாறு, ஊமத்தன் சாறு, கத்தாழைச் சாறு இதில் கரி ஊயல் பொடியரைத்து வஸ்திர காயம் செய்து. இந்த இரண்டு பொடி துளசிச் சாறு விட்டு மூன்று நாள் அரைத்து நாலாம் நாள் இரண்டு மொன்று வட்டமாகத்

தட்டி இரண்டு ஓட்டு நடுவே வைத்து அடையாகப் பிடித்து வைத்து சீலை மண் செய்து ஆற விட்டு எருப் போட்டு புடமிட்டு ஆறின பிறகு எடுத்துப் பார்க்க வெள்ளையாக இருக்கும். இதில் ஆறுப் புண்ணுகளுக்கு ஒரு மண்டலம், அரை மண்டலம் காற்றுப் படாமல் இருந்து எருமைச் சாணந் தோய்த்து முழுகிப் பத்தியத்தில் நடக்க தீரா வியாதி தீரும்.

<u>தாமர செந்தூரம்</u>:-

இரு பலச் செம்பு நல்லதாக வாங்கி ராவி அரத்து ஈசல் இறகு போல் தட்டிக் கட்டைப் புளியிலைச் சாறு ஒரு கலயத்தில் வார்த்து ஊற வைத்து ஊறின பிறகு எடுத்துக் கழுவிப் போட்டு கள்ளிப் பாலில் ஏழு நாள் ஊறப் போட்டு எடுத்துக் கழுவிப் போட்டு ஆற வைத்துப் பிறகு எடுத்துப் புளியில் போட்டு பிசைந்து கழுவிப் போடவும் எலுமிச்சஞ் சாற்றில் ஊறப் போட்டு பிசைந்து கழுவிப் போடவும். பிறகு சல்லியில் நிறுத்து ஒரு பலத்துக்கு நெல்லிக்காய் கெந்தகம் மூன்று பலம் கொண்டு வந்து ஒரிலைத் தாமரை அரைப்பலம் இரண்டு ஒன்றுக் கூட்டி கையாந்தகரை சாற்று வைத்து நன்றாக விழுதோட அரைத்து சல்லியைப் புளியில் பிசைந்து கழுவிப் போட்ட மறுதினம் மருந்திரண்டு சல்லியும் ஒக்கப் பிசறி அகப்பையிலே தளாவி தளாவி வைத்து ஒரு கலசத்தில் சல்லி யெல்லாந் எடுத்து விட்டு மொரு தினம் ஓடு கொண்டு மூடி மூன்று சீலை மண் செய்து நிழலிலே ஆற வைத்து உலர்ந்த பிறகு எடுத்து முழங்காலளவு உயரம் எருவடுக்கி கலசத்தை வைத்து அதன் மேலும் முழங்காலளவு உயரம் எரு வடுக்கி விநாயக பூசை பண்ணி அக்கினி போடவும். அதின் பிறகு எடுத்து விநயக பூசை பண்ணி பற்பத்தை எடுத்து ஒரு சட்டியில் வைத்துக் கொள்ளவும்.

<u>சத்தி உன்மத்துக்கு நெய் செய்யும் வகை</u>:-

சாரணை வேர் பலம் இருபத்தைந்து, முருங்கைவேர் பலம் இருபத்தைந்து ஆயப் பட்டை பலம் இருபத்தைந்து, வெள்ளை வெங்காயம் பலம் இருபத்தைந்து, இண்டம் வேர் பலம் இருபத்தைந்து, சிறு பூளை வேர் பலம் இருபத்தைந்து இதற்கு தண்ணீர் வள்ளம் முப்பத்திரண்டு விட்டு நாலு வள்ளமாகக் காய்ச்சி இது வெல்லாம் கற்கம் திப்பிலி, திப்பிலி மூலம், இந்துப்பு, சுக்கு, ஆனைத் திப்பிலி, பெருங்காயம், சாரணை வேர், எவச்சாரம் கொத்தமல்லி, சீரகம், தேவதாரு, செவியம், நெருஞ்சி வேர், வசம்பு இது வெல்லாம் பொடி பண்ணி பால் விட்டரைத்து பால் படி பனிரெண்டு நெய் படி மூன்று கடைச் சரக்கு நெய்யில் நாழி ஒன்று கொடுக்கவும். சத்தி உன்மத்தம் தீரும்.

<u>ரசச் செந்தூரம், வெண் குஷ்டத்துக்கும்; ஆறாத புண் குலைக்கும்</u>:-

காளிக்காய், பெருந்தும்பை இலை, காசுக்கட்டி, செம்பருத்தி இலை, பருத்தி இலை, இந்தச் சாறு சட்டியில் விட்டு மத்தித்து இலையும் கூட்டிச் சாந்து போலரைத்து காயகண்ட குகையாகப் பிடித்து ஆற விட்டு இருந்தால் அந்த மருந்துக் கொண்டு பூசி ஆறின பிறகு காசிடை ரசம் விட்டு இரண்டு கிட்டைச் சட்டியாக வாய் பெருத்த சட்டியில் ஒரு சட்டியில் அரைச் சட்டி அளவு செங்கல் இடித்துத் தெள்ளி சட்டி யொன்றையிட்டு அதன் மேல் குகையை வைத்து கட்டி கவிழ்த்து மூடி மண் சீலை செய்து ஆற விட்ட விநாயகப் பூசை பண்ணி வெள்ளாவி அடுப்புப் போலே ஒரு முகம்அடுப்பு வைத்து ஒருவகை விறகு இட்டு பொழுது போகுந்தனையும் எரியிட்டு ஆறினால் சீலை மண் மெள்ள வாங்கிப் போட்டுச் சட்டி மேலே இருக்கிற தனை தடைத்துப் போட்டு சட்டி மேலே செந்தூரம் பற்றி யிருக்கும். அதை வழித்து சிமிழிலடைத்துக் கொண்டு ஒரு நாளொன்றுக்கு அரை பணவிடை செந்தூரம் வெல்லத்தில் பொதித்து ஆறு நாள் கொள்ளவும் பத்தியம் காரப்பு, புளிப்பு தவிர்க்கவும். இப்படி ஒரு மண்டலம் நாற்பது நாள் கொள்ளவும் குலை பறங்கி தீரும். ஆறு மாதம் கொள்ள ஆறாத புண் ஆறும். ஒரு வருஷம் கொள்ள வெள்ளை மேல் வெள்ளை தீரும். கை கண்டது.

<u>இரசச் செந்தூரம்</u>:-

சுத்தி பண்ணி ரசம் பலம் ஒன்று, சுத்தி பண்ணின நெல்லிக்காய் கெந்தகம்

பலம் ஒன்று இதில் நாலில் ஒன்று நவச்சாரம் கூட்டி குழிக்கல்லில் போட்டு சூரணமாகி இந்தச் சூரணத்தை காசிக் குப்பியிட்டு நொய் மணலைரத்து காசிக் குப்பியில் பொதித்து அதன் மேல் ஏழு சீலை மண் செய்து ஒரு புதுப் பானையின் அடியில் எறும்புக் கண் போலே துளைத்து அந்த துவாரத்துக்கு குப்பியை வைத்து குப்பியைச் சூழ நாழிப்பு போட்டு அதன் மேல் மண் சீலை போட்டு பானை வாயை சீலை மண் செய்து உலை மூடி கொண்டு ~~[illegible]~~ மூடிய பின்பு சீலை மண் செய்து இராங்கு சீராய்க் கொண்டு பனிரெண்டு சாமம் எரிக்கவும். பாதரசம் குங்கும வன்னமாம் தன குகை சென்றிருகிற வியாதிகெல்லாம் சரீர மறிந்து அரை பணவிடை ஒரு பணவிடை கொடுக்கவும்.

சிரங்கு; சொறி, புண்குலை, பறங்கிக் குஷ்டம், புண்ணுகருக்கும் பௌத்திரத்திற்கும் தைலம்.

அல்லவரி வேர் தோல் பலம் நாலு, இடித்து பனிரெண்டு வள்ளத் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி கோமூத்திரம் இடித்த மஞ்சள் பலம் பனிரெண்டு எட்டு வள்ளத் தண்ணீர் விட்டு இரண்டு வள்ளமாகக் காய்ச்சிக் கொள்ளவும். ஊமத்தை இலைச் சாறு படி ஒன்று, தேங்காய்ப் பால் படி ஒன்று, எருக்கிலைச் சாறு படி அரை, செம்முள்ளி இலைச் சாறு படி அரை, எருக்கிலம் பால் படி அரை, தும்பைச் சாறு படி அரை, கஞ்சா விரைச் சாறு படி அரை, முள்ளிப் பழச் சாறு படி அரை, துளசிச் சாறு படி அரை, படி அரை கார்போக அரிசி இலைச் சாறு படி அரை, தகரை இலைச் சாறு படி அரை, மாவிலிங்கச் சாறு படி அரை, காட்டு முருங்கை வேர் சாறு படி அரை, நல்லெண்ணெய் படி இரண்டு, வேப்பெண்ணெய் படி இரண்டு, புங்கெண்ணெய் படி இரண்டு, கடுகெண்ணெய் படி இரண்டு, நூத்தி ஒன்றும், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், செங்கிளநீர், கோஷ்டம், குக்கில், கச்சகசா, கடுகு, குங்கிலியம், அரிதாரம் நெல்லிக் காய், கெந்தகம், மயில் துத்தம், மலை மஞ்சள், நல்ல மஞ்சள், கொடுவேலி வேர், தேவதாரம், ஏலம் மஞ்சிட்டி நாயுருவி தகரை விரை, கார்போக அரிசி, திரிகடுகு, பேச்சுரை விரை, வேலிப்பருத்தி வேர், இந்துப்பு, சத்திச் சாரம், கார்த்திகை கிழங்கு இருபி யவாச்சாரம், கடுகுரோகிணி, கோரசனை, அமுக்கிரா வேர் நாகதந்தி வேர், வெள்ளை வெங்காயம், வேப்பம் விரை ஒவ்வொன்று விராகனிடை எட்டு இடித்து அரைத்து எல்லாம் கூட்டி மிருதுவாக்கினியில் எரியிட்டு தைலமாகிற மட்டும் எரியிட்டு வடித்துக் கொண்டு பிறகு ரச பற்பம் ஒரு பலம் போட்டு மத்தித்து தானிய புடம் ஒரு மாதம் வைத்துக் கொள்ளவும். மேலுக்குப் பூசவும் பவுத்திரத்துக்கு இலையில் தடவிப் போடவும்.

புண் குலைக்கும், குஷ்டத்துக்கும் உள் மருந்து:-

கெந்தகம் பலம் நாலு கொண்டு வந்து நன்றாய் பிசைந்து பொடி செய்து சின்ன குண்டு சட்டியில் நாலு படி பசுவின் பால் விட்டு மேலே கொட்டிச் சீலைத் துண்டு கட்டி நாலு விரலிடை குழித் தோண்டி குழிக்குள்ளே வைத்து தோண்டின மண்ணை சுற்றி மண்டைக் கொடுத்து கெந்தகப் பொடி வேட்டின் மேலே பரப்பி சட்டி தெரியாமல் ஒரு களத்துச் சந்து தெரியாமல் மண்ணை அணைத்து எருவடுக்கி நாலு புறமும் சமமாக தீ வைத்து வெந்து ஆறின பிறகு எடுத்து பார்க்க பாலுக்குள்ளே உருகி விழுந்து கிடக்கும். அதை எடுத்துக் கொண்டு அதிலே ஆறு பலம் கெந்தகம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், வாய்விளங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, குக்கிலியம் ஒவ்வொன்றும் விராகன் ஆறு வஸ்திர காயம் பண்ணி உள்ளுக்குக் கொள்ளவும். ஆள் அறிந்து ஒரு விராகனிடை கொடுக்கவும். இதற்குச் சமன் சர்க்கரை கூட்டி கொள்ளவும். இதற்குச் சமன் நெய் விட்டு மத்தித்துக் கொள்ளவும். பத்தியம் பசுவின் பால், பசுவின் நெய், வெல்லமாம். மிளகுமாம். சன வியாதிக்கு ஒரு மண்டலம் கொள்ளவும் மறு பத்தியம் பிடிக்கவும். கார்ப்பு, புளிப்பு ஆகாது.

<u>ரச பற்பம்:-</u>

ரசம் விராகன் ஒன்பது, இந்துப்பு விராகன் பதினைந்து இந்த இரண்டும் எலுமிச்சம் பழச் சாற்றிலே மத்தித்து பெரிய சட்டி வைத்து நடுவே அரைத்தமருந்தை வைத்து மேலும் சட்டியால் மூடி உப்பு மாக்கல்லு உமிக்கரி, புற்று மண், கொழுஞ் சியம் கொளிஞ்சைப் பட்டு இது நல்லாய் அரைத்து மூன்று சீலை மண் செய்து அடுப்பிலே வைத்து கமலாக்கினியாக முப்பது நாழிகை எரித்து ஆற விட்டு எடுத்துக் கொண்டு பரணியில் வைத்துக் கொள்ளவும்.

<u>மூத்திர கிரிச்சினத்துக்கு இளநீர் நெய்:-</u>

இளநீர் நாலு படி தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு நாழி பூசனிக்காய் தண்ணீர் நாழி வாழை கிழங்குத் தண்ணீர் நாழுழி, கரும்பின் சாறு இருநாழி, பொன்னாங்கண்ணி, சாறு இரு நாழுழி ஒரிலைத் தாமரைச் சாறு நாழி, நீர்முள்ளி இலைச் சாறு இரு நாழி, சீந்தில், கசாயம் இருநாழி இந்தச் சாறு சேர்த்த கூட்டி இதில் பசுவின் நெய் நாழி இதில் கற்கம் கல்நார், கல்மதம், சிலாசித்து சிறுபீளை வேர் செங்குருளி வேர், பொன் னாங்கன்னி வேர், ஆனைத் திப்பிலி, கூகை நீர், ஏலம், வெள்ளரி நீர், முள்ளி விரை, தேத்தான் விரை, பொன்னூமத்தை விரை இவை ஒவ்வொன்றும் மூன்று காசிடை பால் விட்டரைத்துக் கலந்து காலமே கழஞ்சி கொள்ள மேக வியாதிகள் கிருச்சினம், சுக்கிலம் விரியம் கை கால் உடம்பு எரிச்சல் சகல உஷ்ண வியாதிகள் முதலாக தீரும்.

<u>கூஷ்பாண்ட கிருதம்:-</u>

பூசனிக்காய்ச் சாறு குறுணி, நீர்வள்ளிக் கிழங்குச் சாறு குறுணி, கரும்புச் சாறு இரு நாழி, பால் இரு நாழி, பசுவின் நெய் இருநாழி, சேர்த்து ஒன்றாய்க் கலந்து இதில் ஏலம், லவங்கம் திழலரிசி, சீரகம், கருஞ்சீரகம், அசமதாகம், இந்துப்பு, சாதிக்காய், சதகுப்பை, கூகை நீர், அதிமதுரம், கோஷ்டம், முந்திரிப் பழம், பேரீச்சம் பழம் இவை ஒவ்வொன்றும் அரைக் கழஞ்சாகக் கூட்டி இவை யெல்லாம் பால் விட்டரைத்து கலந்து பெயன் பழம் பதமாக் கடக் கூட்டி மூன்று நாள் சிறு கொதியிட்டு நாலாம நாள் வடித்து பின்பு இதிலே உழக்கு சீனி கலந்து காலமே இரு களஞ்சி கொள்ள உடம்பிலுள்ள வெக்கை உடம்பு இளைக்கிறது பருக்கும். அங்க தாகங்கள் இருமல் நெஞ்சு நோக்காடு ரத்த பித்தம் மாதர் காசம் உதிர கிருச்சனம் மூத்திர பாளம் இது வெல்லாம் குணமாம்.

<u>சொர்ண கிருதம், குடல் வாதத்துக்கு:-</u>

வெள்ளுள்ளி உரித்த பருப்பு நாலு பலம் பதினாறு வள்ளத் தண்ணீர் வார்த்து மூன்று மரக்கலாகக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். பெருவாகை, பெருமிளாகு, முன்னை வில்வை, பாதிரி இது ஒரொன்றும் பலம் ஏழரையாகக் கூட்டி இடித்து நாலு மரக்கால் தண்ணீர் வார்த்து நா லொன்றுகக் காகய்ச்சி வடித்து இரண்டு கசாயமும் கூட்டி இதில் பழங்காடி இரண்டு படியும் தாது மாதுளம் பழச் சாறு இரண்டுபடியும் விட்டு இதில் கற்கம் திரிகடுகு, திரிபலை,, பெருங்காயம், சீரகம், செவியம் அசமதாகம், இந்துப்பு, தேவதாரம், புளியாரைக்கிழங்கு இவை ஒரொன்று நாற் களஞ்சி கூட்டி வெள்ளாட்டுப் பாலில் அரைத்து கலந்து பதத்தில் வடித்துக் கொள்ளவும். காலமே களஞ்சு கொள்ளவும். அ. வகைக் குடல் வாதமும் தீரும்.

<u>கெந்தக ரசாயனம்:-</u>

கெந்தகம், ஆறு பலம், திரிகடுகு, திரிபலை, வாய்விளங்கம், லவங்கம், லவங்கப் பத்திரி, சிராம்பு. சணப்பம் விரை, சேங்கொட்டை ஆக மருந்து பதி மூன்றும் ஒவ்வொன்று ஒரு பலம் இவை எல்லாம் சூரணம் பண்ணிக் கொள்ளவும் குஷ்டம் பதினெட்டும் தீரும். கிராணி பதினெட்டும் பஞ்ச குன்மம், பயித்தியம் இடுப்புக்கிறுதும் மந்தாக்கினி இவை யெல்லாம் தீரும். தாது விரியம் ஆயுசு விருத்தி தேக காந்தி பலம் இவை யெல்லாம் உண்டாம். கெந்தகம், நெய்யில் பொரித்து போட்டு பதமான எடுத்து பொடி போடவும். கிராணி குன்மத்துக்கும் நெய்யில் கொடுக்கவும்.

வல்லாரை நெய் :-

வல்லாரை சர்வ மூலம் பிடுங்கி அலைத்து நாலு படி சாறு பிழிந்து கொண்டு சீதேவியார், செங்கிலை நீர்சாறு ஒரு படி கருப்பாலைச் சாறு ஒரு படி பசுவின் பால் நாலுபடி, இளநீர் இரண்டு படி, பசு நெய் ஒரு படி இது ஒன்றாய்க் கலந்து இதற்கு கற்கம் மஞ்சட்டி அதிமதுரம், கோஷ்டம், செங்கழுநீர் கிழங்கு, குன்றி வேர், ஆவரி யிலை, பச்சை கற்பூரம் இது ஒவ்வொன்றும் நாலு களஞ்சாகக் கூட்டி பால் விட்டரைத்து மூன்று நாள் சி- சொரியிட்டு நாலாவுள் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு காலமே களஞ்சு கொள்ள அசதி கை கால் எரிப்பு உடம்பு எரிப்பு, வயற்றுக்குள் எரிப்பு, வாய் நாக்கு நெஞ்சு உலர்கிறது, காச்சல் மருந்தீடு உடனே தின்ற பச்சை நாபி எட்டி, அல்லி கழுதை வண்டு இது முதலான நஞ்சும் இளைத்த உடம்பு பருக்கும், ஈளை இருமல் தீர்ந்து அனேகம் சுகம் கொடுக்கும். பல கண் படாமல் கவித்துப் பண்ணவும். வெகு உசிதம். துரைகளுக்குப் பண்ணிக் கொடுக்கவும்.

குன்மம் சூலை பீலிகை வழுலைக்கு :-

ரோசனத்துக்கு புங்கங் கொட்டை முற்றலாக ஒரு துலாம் பொடியாக இடித்து நாலு மரக்கால் புளித்த காடி விட்டு காய்ச்சிப் பிசைந்து புழிந்து வடித்துக் கொண்டு இதில் இரண்டு படி உப்பு ஒரு படி வெள்ளுள்ளி உரித்த பருப்பு வெள்ளாட்டுத் தயிர் கடைந்தார் போலே வார்த்து பால் நாலு படி விட்டு உழக்கு விளக்கெண்ணெயும், உழக்கு நெய்யும், உழக்கு கள்ளிப் பாலும் விட்டு மந்தாக்கினியாக எரிக்க இது குழம்பிவருகிற பக்குவத்தில் போடுகிற மருந்து கொடு வேலி வேர் பட்டை சுக்கு, மிளகு, திப்பிலி ஓமம், சாரணை பெருங்காயம், சைந்த லவணம், யவச்சாரம், இந்துப்பு, உவர் மண் மாதுளை புளியஞ்சிராய், பலாசு ஆடாதொடை, கொன்றைக் கள்ளி இவைகள் சுட்ட சாம்பல் இது ஒவ்வொன்றும் அரைப்பலம் பொடி போட்டு கிளறி எண்ணெய் கலசத்தில் விட்டு வைத்துக் கொண்டு காலமே ஒரு கொட்டைப் பாக்கு அளவு எண்ணெய் கொள்ள குன்மம் சூலை பீலிகை வழுலை நிச்சமை வெப்பு மார்வை யிடுதல் கிராணி இது முதலான தெல்லாம் தீரும். அந்தந்த வியாதியுட அநுபானம் கற்கம் கசாயம் பொடி இதிலேயும் இடலாம்.

பரங்கிப் பட்டை புகை விவரம் :-

பரங்கிப் பட்டை சேர் ஒன்று இதில் கடைச் சரக்கு சாதிக்காய், சாதி பத்திரி, கிராம்பு, திப்பிலி, திப்பிலி மூலம் வகை ஒன்றுக்கு விராகனிடை நாலு புகை சாலிங்கம், மயிலாச்சி, குக்கிலம், சாம்பிராணி புகை பிடிக்கவும். பட்டை நனைக்க மருந்து செருப்படி இலை நொச்சிலை, துளசிச் சாறு நாலும் கூட்டி பட்டையை நனைக்கவும். பிறகு புகைப் பிடிக்கவும். குகிகா வாய்வு, பரங்கிப் புண், சூலை கட்டு, சூலை முடக்கம் சகலமும் தீரும்.

பெரும்பாட்டுக்கு நாவல் நெய் :-

நாவல் பட்டை, உதியம் பட்டை, கருங்காலிப் பட்டை, நிலப்பனைக் கிழங்கு இது நாலும் ஒவ்வொன்று இருபத்தைந்து பலமாக நாலு பலம் இடித்து இரு கலத் தண்ணீரில் போட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடித்து இதில் இரண்டு படி பசுவின் நெய் கலந்து புளியஞ் சாறு நீர்வள்ளிக் கிழங்குச் சாறு பசுவின் பால் இது ஒவ்வொன்று இரண்டு படி கலந்து இதில் கற்கம் விளாம்பழம் கொத்தமல்லி சிறுகாஞ்சொறி பொன்முசுட்டை கடுகு, நெல்லி, தான்றிக்காய், மாங்கொட்டை, கீழா நெல்லி, உதியம் பட்டை, மொட்டக்கத்தான் தாயத்திர் பூ, மாதளை யோடு, பேரிச்சம் பழம், முந்திரிகைப் பழம், பெருங் குமிழம் பழம், சுக்கு, ரத்த சந்தனம், இலவன் பிசின், தாமரைத் தாது, வில்வப் பிஞ்சி, விளாம்பிசின், அதிவிடையம், கோரைகிழங்கு, வெள்ளி லோத்திரப் சாத்திரவேதி, அஞ்சனக் கல்லு, கல்நார், திப்பிலி, அமுக்கிரு வேர், நன்னாரி வேர் விலாமிச்சன் வேர், குங்கிலியம் லவங்கம், லவங்கப் பட்டை நாகப்பூ, புளியன் விரைக் கோது, குருசாணி, ஓமம் இது வெல்லாம் ஒவ்வொன்று களஞ்சிடை கொண்டு பால் விட்டரைத்து கலந்து பதத்தில் வடித்து காலமே ஒரு மண்டலம் கொள்ள நாள் பட்ட

ஜெம்புருக்கி, காய்ச்சல், க்ஷயம் நாலாவிதமாக விழுகிறதும் சொப்பனத்திலே விழுகிறதும் சிறு பிள்ளைக்கு விழுகிறதும், மகா சகல சுவாச காசம், பிரமியம், பெரும்பாடு, ரத்த பித்தம், காமாலை, பாண்டு ரோகம் இது முதலான தெல்லாம் தீரும்.

ராத்திரி கச்சாயம் பருத்தி விரை, நிலைப் பனங் கிழங்கு, முசுமுசுக்கை வேர் அமுக்கிரா வேர், நீர் வள்ளி கிழங்கு, பேரீச்சம் பழம் இது ஒவ்வொன்றும் ஒவ்வொரு விராகனிடை நாழிப் பாலிலே கஷாயமிட்டு உழக்காகக் காய்ச்சி நெய், சர்க்கரை கலந்து கொடுக்க முன் சொன்ன வியாதிகளும், உடம்பு உலருதல், கை கால் எரிப்பு தீரும்.

<u>சகல மூலத்திற்கும் கிருதம்:-</u> 27.2.63.

~~[illegible]~~ சிவந்த நாயுருவி நாலு பலம் இடித்து எட்டு மரக்கால் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு ஒரு படி பசுவின் நெய் கலந்து கற்கம் கொடிவேலி வேர் பட்டை, திரிகடுகு, திரிபலை, இந்துப்பு, சிறுகாஞ்சொறி வேர், வெட்டி வேர் பொன் முசுட்டை வேர், சிவதை வேர், நேர் வாளம், செங்கொட்டை சுளப்ப விரை, கொல்லைப் பல்லி, கஸ்தூரி மஞ்சள், சான்றிப் பட்டை, ஆவில் பட்டை, புங்கம் பட்டை பிரண்டை கிழங்கு, புளிப்பரளை கிழங்கு இவை சமாக எடுத்து பாலிலரைத்து நாலு படி பசுவின் பால் விட்டு நாலு நாள் காய்ச்சி அஞ்சா நாள் வடித்து காலமே கொள்ள உள் மூலம், புற மூலம், உள் ரத்த மூலம், சீ மூலம், முதலான அனைவகையும் அடைப் பிறப்பட்டதும் மூலக் கடுப்பு, நிவு பிள்ளையும் ஆனை விடுமுள்ளதும் தீரும். குடிநீர் விளாமிச்சன் வேர் லவங்கப் பட்டை, மரமஞ்சள் மூன்று ஒவ்வொன்று ஐந்து காசிடை ஒரு படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாகக் காய்ச்சி கொடுக்க ரத்த மூலம் தீரும். இன்னொரு வகை சுக்கு, வெட் பாலைப் பட்டைக் கஷாயமிட்டுக் கொடுக்க ரத்த மூலம் நிற்கும். ⓐ இன்னமொன்று ~~அதிமதுரம்~~ வெப்பாலைப் பட்டை வெப்பாலையரிசி, கெருட்ப் பச்சை, அரிசிக் கழுநீரில் சமன் கூட்டி கழுநீர் விட்டரைத்து தேன் கலந்து கொடுக்க ரத்தம் நிற்கும்.

செங்கழு நீர் கிழங்கு, இலவன் பிசின், நல்ல சந்தனம் இவையெல்லாம் வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் கொள்ள ரத்தம் நிற்கும். பெருமரப்பட்டை தேங்காய் மாத்திரம் நசுக்கி ஒரு சட்டியில் வேடு கட்டி அதில் அவித்து வெந்த பிறகு பிழிந்து எடுத்துக் கொண்டு சட்டி காய வைத்து நல்லெண்ணை ஒரு கரண்டி விட்டு வெந்தயம், கடுகு, கருவேப்பிலை போட்டு சாற்றை தாளிதம் பண்ணி சுடச் சுட ஆற்றி மூன்று நாள் அந்தப் படிக் கொடுக்க ரத்தம், சீயும் நிற்கும். இது கை கண்டது. பத்தியம் தயிராம்.

<u>சலகவிதமான புண்ணுக்கும்:-</u>

வெள்ளைக் குங்கிலியம் விராகனிடை இரண்டு, காசுக்கட்டி விராகனிடை இரண்டு எள்ளெண்ணையாகிலும், வெண்ணெயாகிலும் கூட்டவும். முன் சொன்ன சடை மருந்தெல்லாம் பொடி செய்து சட்டி காய வைத்து அதில் வெண்ணையும் எண்ணையும் போட்டு [illegible]ம் போட்டு விளாவிக் காய்ச்சி பதத்திலே இறக்கிக் கொதிக்கும் போது முந்தின வெண்ணையும், எண்ணையும், மிளகும் போட்டு கொதிப்பித்து இறக்கவும். இதில் காசுக் கட்டியும் புடம் போட்டு விடவும். யாதொரு புண்ணும் அரையாப்பு இப்படிக் கொத்த புண்ணுக்கெல்லாம் மெல்லிய சீலையில் பிடிப்பித்து புண்ணுக்குப் போட்டு நாலு நாள் எடுக்காமல் இருக்கவும். பின் புளியந் தண்ணீர் விட்டு கழுவிப் போடவும். பிறகு மருந்து போடவும். எந்தப் புண்ணும் நாலு நாளையிலே ஆறிப் போகும். கை கண்டது.

<u>பீனிசத்துக்கு லேகியம்:-</u>

[illegible]தாளி வேர் பலம் மூன்று, புழுங்கலரிசி பலம் மூன்று, பசுவின் நெய் படி ஒன்று, பசுவின் பால் படி ஒன்று, சர்க்கரை பலம் இரண்டு இதுகளை மெழுகு பதத்தில் காய்ச்சி கிளிச்சி காய் பிரமாணம் சாப்பிடவும். புகை, புளிப்பு தவிர்க்கவும்.

(வேறு) நாரத்தம் பழச் சாறு படி அரை, எலுமிச்சம் பழச் சாறு படி அரை, நெல்லிக்காய்ச் சாறு படி அரை, குருட்டைப் பழச் சாறு படி அரை, அஞ்சிலை நொச்சி ஆதண்டை கரிப்பான் பிஞ்சுருவி, வெற்றிலை, வேப்பெண்ணை இதற்கு சரக்கு சன்ன லவங்கப் பட்டை

ⓐ இன்னமொன்று அதிமதுரம், சந்தனம், நிலவேம்பு, சிறுகாஞ்சொறி வேர் கஷாயமிட்டு கொடுக்க ரத்தம் நிற்கும்.

அரைகால், லவங்கப் பத்திரி அரைக்கால், கோரோசனை அரைகால், கொத்தமல்லி அரைகால், நற்சீரகம் அரைகால், மிளகு அரைகால், அதிமதுரம் நால்மிளகு, வாய் விளங்கம் இது வெல்லாம் எண்ணெயில் காய்ச்சி தலைக்கு தேய்க்கத் தீரும்.

சுரத்துக்கு கசாயம்:-

ஆடாதோடை, பேய்புடல், சிந்தி பற்பாடகம், நீடா கண்டங்கத்திரி, நில வேம்புடனே நீள் மிளகு வாடா குருணி நீர் விட்டு வகுக்கி அரைப்படியா இறக்கி போட அந்த சுரங்கள் எல்லாம் புகழ்ந்து செல்லும் பரியோடு இதை விட்டு இஞ்சிறுல் மாத்திரை வைக்கிற வகை தாளவனை கண்டங்கத்திரி, துளசி சங்கிலை இந்த வகையைப் புட்டான் அவியல் பண்ணி இதில் மாத்திரை வைக்கவும். இதை விட இஞ்சிறுல் சுக்கு கசாயம் வைத்து அதில் மாத்திரை வைக்கவும்.

பிலிகை குலேமுட்டி நீர் ஆமை இதற்கு மருந்து:-

கண்ணு பாவம் வெடியுப்பு காந்தயிதமா யிந்துப்பு உள்ளி வசம்பு சுக்குடனே ஒவ்வ கடுகு திப்பிலியும் இன்பமுடனே நேர்வாளம் தென்னங்காய்க்குள்ளே விட்டடைத்து தேங்காய் புடமாக வேக வைத்து வெல்லம் கூட விட்டு இடித்து விட யமாடு குடுப்பி யிராய் குமடவைத்த வலி நோவு குலமுட்டிநீராமை கண்ணு புரத்தல் காணமல் கலைந்து வார்த்து விசைந்திடும்.

பித்தமூல ரோகத்துக்கு:-

அகத்திப்பட்டை வாழைப் பூவும் அன்பாயிடித்து புட்டாய் வித்து
கொத்திப் பொடித்து பிழிந்து கொண்டு கோத விடயம் பேற் ரா வி
மெத்த சீனி உடன் கூட்டி மிகவே யுண்ண வல்லீராய்
பித்த கழிச்சல் அதிசாரம் பிரட்டி ஓடும் கண்டீரே.

வேப்பம் பட்டை, கடுக்காய், நெல்லிமுள்ளி தானிக்காய், முக்கலிஞ்சு கொண்டு இரு நாழி நீர் வார்த்து உழக்காய்க் காய்ச்சிக் கொடுக்க பத்தியம்.

மலசலம் அடைத்தால் மருந்து அண்ட வாதத்துக்கு உன்மத்தத்துக்கும்:-

சிறு நெரிஞ்சிக்காய்ச் சாறு உழக்கு சித்தாமணக்கு எண்ணெ உழக்கு, மிளகு பலம் ஒன்று, இவை கசாயமாகக் காய்ச்சிக் கொடுக்கவும். இச்சா பத்தியம். கோழி காரமும், கருப்பு கட்டியும் கொடுக்கத் தீரும். பத்தியம் நார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

சந்தி உன்மத்தத்துக்கு மருந்து:-

சுக்கு, இந்துப்பு, வெடியுப்பு, கந்தம், திப்பிலி ஐந்து மருந்தும் வகை ஒன் பத்து விராகனிடை ஒன்று. இதை வருத்து பொடி செய்து அந்தி சந்தி இரண்டு காசிடை தின்னவும். இப்படி ஐந்து நாள் தின்னவும். உப்பு, புளிப்பு தவிர்க்கவும். வாய்வுக்கு ஆகாததைத் தள்ளி விடவும். கற்பூரம் பசுவின் வெண்ணெயும் மத்தித்து உச்சந் தலையிலும் தடவவும். சந்தனம், கையான்தகரை நெல்பொரி ஏலம், சுக்கு, சர்க்கரை இது வெல்லாம் கசாயமாகக் காய்ச்சிக் கொடுக்கவும் தீரும்.

பிரமியத்துக்கும், ரத்தப் பிரமியத்துக்கும்:-

மருதங் கொழுந்தை இடித்து உரித் தண்ணீரில் பிழிந்து அரைப்படி பாலுங் கூட்டி வெல்லமாவது சர்க்கரையாவது போட்டு மூன்று நாள் கொடுக்கவும் பத்தியம்.

ரத்தப் பிரமியத்துக்கு குப்பை கீரை வெரும் இலை வெங்காயம் ஒரு எலுமிச்சங் காயளவு அரைத்து எருமை வெண்ணெயில் மூன்று நாள் தின்னவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

பித்த காங்கைக்கு, சீரக தைலத்துக்கு சரக்கு:-

சீரகம் ஒன்று, எலுமிச்சம் பழம் இருபது சீரகச் செந்தி நீர்ச் சாறு, முசுமுசுக்கைச் சாறு வெல்லரைச் சாறு ஓரிலைத் தாமரைச் சாறு இளநீர் பசுவின் பால் கரப்பான் இலைச் சாறு சிறுகீரைச் சாறு படி அரை.

<u>கிரானிக்கு</u>:-

எருமைக் கயிர் ஒரு படி உசியம் பட்டை அரைக்க எலுமிச்சங் காயளவு கஞ்சா ஒரு புளியங் கொட்டை அளவு அரைக்கக் கூடப் போட்டு கோழி முட்டை மஞ்சலத்தில் கலந்து கொடுக்கத் தீரும்.

<u>ஆகக வாய்வுக்கு லேகியம்</u>:-

சுக்கு, வெள்ளை வெங்காயம், மிளகு, கோஷ்டம், கோரோசனை, ஓமம், அசமதாகம், வால்மிளகு, சித்திரத்தை கருஞ்சீரகம், வால்மிளகு, கஸ்தூரி மஞ்சள், பெருங்காயம் இசக்கு கசாயம் வேப்பம் பட்டை முசுட்டை வேளை வேர், ஆவரை வேர், கண்டங் கத்திரி வேர், நார்த்தை இலை, முருங்கிலை, சிற்றாமணக்கு இலை, கருப்பான் இலை, கச்சக்கிரை இலை இவை யெல்லாம் நல்லெண்ணை படி கால் மயிர்க் கொள்ளைக் கொழுந்து, ஏலரிசி, மிளகு, வெள்ளை வெங்காயம், நல்லெண்ணையில் யெரிக்க அரைக்கப் போடவும். அம்மா அரைக்கப் போட்டுவாறைப்பிட்டு முழுகவும் தீரும்.

<u>கரப்பானுக்கு எலிக் கடி இழுப்புக்கு</u>:-

பூனைப் பிசிரம், கருப்புக் கட்டியும், அமக்கை சாறு விட்டு அரைத்து மாறு மூன்று நாள் கொடுக்கவும். ஆறு நாள் பக்கியம். ஆறு நாள் ஊத்தல் கழித்து மூச்சுப் பொறுகாமல் ஆறு குடம் தண்ணீரிலிடவும் எல்லாம் கூட்டிக் கொள்ளவும்.

<u>ஆக்ராணப் பொடிவகை ஆரோசினை சோகை கண்டா அமுகம்</u>:-

... விராகனிடை அரை, மிளகு விராகனிடை அரை, வெண்காரம் விராகனிடை அரை ரசம் விராகனிடை அரை, வெண்ணுவ் விராகனிடை அரை, அரிசி, திப்பிலி, விராகனிடை அரை வெள்ளைப் பாஷாணம் விராகனிடை அரை, மஞ்சிலை விராகனிடை அரை; கெந்தகம் விராகனிடை அரை,

நெல்லி திப்பிலி, நெல்பொரி, சர்க்கரை, நல்ல தேன், நரு நெய்யில் அழைத்திட இல்லை இல்லை இளைப்பும் இருமலும் சொல்ல வெட்டிட சோகையும் போகுமே.

<u>தலைப் பயித்தியத்துக்கு மருந்து</u>:-

மொசுமொசுக்கை ஒரு பிடி, நரிப் பயிற்றங் கொடி ஒரு பிடி, கடலை பயிறு ஒரு பிடி, நெல்லி முள்ளி அரை பிடி, பாசிப் பயறு ஒரு பிடி இது வெல்லாம் உரலிலே போட்டுத் தள் பண்ணி கால் பணத்துக்கு சர்க்கரை வாங்கிக் கலந்து மூன்று நாள் கொடுக்கவும். தலை பைத்தியம் தீரும் .

<u>வெட்டைக்கு மருந்து</u>:-

முற்றின மாமரத்துப் பட்டையை வெட்டி வந்து காஞ்சி விரையிலே போட்டு அரைபடி சாறு வாங்கி கொடுக்க வேர் போனதை மருந்து சங்கு சுண்ணம் போட்டு கொடுக்கவும். கலக்கிக் கொடுக்கவும் தீரும். பத்தியப் பிலாகவிர் விளக்கெண்ணை, முடக் கொத்தான் வெங்காயச் சாறு, மொடக்குத்தான் வெந்து மொருங்க பதமாய் வருகிற போது இறக்கிக் கொடுக்கவும் தீரும்.

<u>கருங் கிரந்திக்கு மருந்து</u>:-

சிற்றாமணக்கு என்னை ஒரு படி, வெங்காயச் சாறு ஒரு படி, வெடிக் காச்சி வேர், மேல் கோல் இழைத்து போட்டு உள் தோல் ஒரு பிடி புங்கம் பால் படி கால் கழுதை லத்திச் சாறு ஒரு படி, வெள்ளை வெங்காயம் படி கால் இது வெல்லாம் மருந்து வைத்துக் கொண்டு அந்த என்னையை ஐந்து மாத்திரையில் ஒரு தரம் ஏழு மாத்திரையில் ஒரு தரம் மூன்று நாள் கொடுத்து ஆறு நாள் பத்தியம் பிள்ளை பிறந்தால் காதில் விடவும்.

~~சொல்லுகிறேன் விஷ பேதி உலகிலுள்ளோர்க்கு தோஷமிலும் மூன்று வகை அதன் பேர்~~

கேளு

சொல்லுகிறேன் விஷபேதி உலகிலுள்ளோர்க்கு தோன்றிடும் மூன்று வகை அதன் பேர் கேளு
அல்லலுறுங் கொம்பனென்றும், படுவன் என்றும் அக்கரத்தின் கழிச்சல் என்றும் அரையக் கோளாய்
அல்லல் செய்யும் கழிச்சல் வகை மூன்றுக்குள்ளே யசாத்தியமும் சாத்தியமும் அறியச் சொல்வேன்
வெல்லுமடா கொம்பனென்ற கழிச்சல் வந்தால் வெகு சுருக்காய் ஓர் பகலிற் கொல்லும்
கொல்லும் வகைதனைக் கேளு உடம்பு வேர்க்கும் குளிர்ந்து விடும்
நீராகப் பிரிந்து போகும் வெல்லும் வகை தனைக் கேளு
ஒரு காலம் வேதன் விதிப்படியா மென்றறிவலன்னவிக் கொண்டே சேர்தாரனே.

<u>மரண வாதத்துக்குக் குடி மருந்து</u>:-

விஷ்ணு கிராந்தி சமூலம், நாதாறு சமூலம் சரி கூட்டி இடித்து நல்லெண்ணெயில் நனைத்து குரிய புடம் வைத்து உள்ளும் கொடுத்து மேலும் மேலும் திமிரிட மரண வாதம் தீரும். மயிர் மாணிக்க இலையும் பூசுஇலையும் அரைத்து வெள்ளாட்டுப் பச்சைப் பாலில் குடிக்கவும் கழுதைப் பாலும் குடிக்கவும் தாளுகை திறக்கும். காட்டுச் சிங்கை புனுகும் அரைத்து கடை வாயில் தள்ளி வைக்கவும். கம்பிப் பிசின் நல்லெண்ணெயில் காய்ச்சி செவியிலே விட்டு ஊத்த நாழிகை திறக்கும். கோழி கைக் குதிரை முன்னிட லத்தியை விட்டு நடு வந்ததை எடுத்து பசுவின் பச்சைப் பாலிலே அரைத்து வடித்துக் கொடுக்கத் தீரும். தாளுகை திறக்கவும் வெள்ளை குட்டித்த காளி கருங் குடிக்க காளி சர்வ மூலமும் துவைத்து அரைப்படிச் சார் வாங்கி நல்லெண்ணெய் அரைச் சேர் லவங்கம், ஏலம், அதிமதுரம் குங்கிலியம், செங்கழுநீர், கோஷ்டம், செண்பகமொட்டு, நெல்லி முள்ளி, விளாமிச்சன் வேர், முடிவாளம் வேர், குன்றி விரை சரி கூட்டி பொடித்து கிரச்ச வெண்ணெயில் போட்டு எண்ணெய் நிற்க வடித்து உள்ளும் இந்த எண்ணெய் கொள்ளவும். மேலும் சர்வாங்கமும் மத்திக்க சர்வ வியாதியும் தீரும்.

<u>பைத்தியம் சனியம்</u>:-

கீழா நெல்லி வேர், சுக்கு பசுவின் நெய் பச்சைப் பாலும் குடிக்க பித்தம் கழியும். பாசிப் பயறும் சோலைக் காயும் நற்பாலையிலையும் பூமிச் சர்க்கரை கிழங்கும் கூடரைத்து காசளவு எண்ணெய்க் கூட்டிக் குடிக்கப் பித்த நாசம்.

<u>ரத்த பித்தம் பாண்டு ரோகம்</u>:-

ஏலரிசி தூக்கம் ஒன்று, லவங்கம் தூக்கம் ஒன்று, தாமரை புத்திரம் தூக்கம் ஒன்று நாகெசம் தூக்கம் நாலு, மிளகு தூக்கம் ஐந்து, திப்பிலி தூக்கம் ஆறு, சுக்கு தூக்கம் ஏழு, சீதேவி வேர் தூக்கம், எட்டு சர்க்கரைக் கூட்டி கழற் பிரமாணம் கொள்ள ரத்த பித்தம் பாண்டு ரோகம் காசம், சுவாசம் தீரும்.

மூக்கில் ரத்தம் விழுகிறதற்கு சீந்தில் கொடி அருகு வேர் முதன் நாள் நனைத்து மூக்கில் பிழிய ரத்தம் மாறும். கற்றாழை மணியைக் கழுவி அவுரிஞ்சியும், நீர் பூலாஞ் சிராயும் கூடப் பிசைந்து வடித்துக் கொண்டு ஏலம், கருஞ்சீரகம், வெள்ள இட்டு நாழிகை சாறு இடித்து அதன் பிறகு விளத்தியிலே துவைத்து தயிர் வார்த்துப் பிசைந்து தலைக்குத் தேய்த்து மேல் வைத்துக் கட்ட மூக்கில் ரத்தம் மாறும்.

சிறுகீரை வேர் சமூலமும் துவைத்து கழு நீரில் பிசைந்து உள்ளுக்கும் கொண்டு தலைக்குத் தேய்த்து மேல் வைத்துக் கட்ட மூக்கில் ரத்தம் மாறும்.

சங்கன் வேர் விளாங்காயளவு அரைத்து பசுவின் பாலிலரைத்து நாழி நெய்யில் வேக வைத்து தலைக்குத் தேய்த்து உள்ளுக்கும் கொள்ள மூக்கில் ரத்தம் தீரும்.

வெள்ளாட்டு பாலும் சர்க்கரையும் முலைப் பாலில் நசியம் பண்ணத் தீரும்.
அதிமதுரம், செங்கழுநீர், கோஷ்டம், முலைப்பாலில் நசியம் பண்ணத் தீரும்.

பித்தம் அதிகமாயிருக்கிறதற்கு:-

பித்தம் அதிகம் நுரை கூட்டிக் கப்பாய் ரத்தம் உமிழ்கிறதும் ஏறப் போகிறதும் அரோசிகமும், சிறிது அசக்தியிலே ரத்தம் பித்தம் ஒன்றாக்கும் பலவிதமாய் உமிழ்கிறதும் இந்த ரத்தம், பித்தம், பிர கோபம், உபயக்ஷயம் பண்ணினால் சத்தியும் மூர்ச்சையும் சுவாசமும் காசமும் உடம்பு மெலிகிறதும், நாவல் பழ நிறம் உமிழ்கிறதும் வயிற்றில் விருசாய் நகத்தும் பார்ச் சூலை யற்றமாகிறதும் கிராணி குன்மம், சுவாசம், குஷ்டம் இந்த வியாதிக்கும் ரத்தமே காரணம். இதற்கு பிருதி சாந்தி அவுஷதம் பண்ண மருந்து. வேப்பிலை, நெல்லிக் காட்டு, சர்க்கரை பேய்ப்புடலம், சிறுகண்டம், ரத்த சந்தனம் பற்படாகம்; சிறுகீரை வேர், தாமரை கிழங்கு இவைகள் சரி கூட்டி கசாயம் பண்ணி ஆற்றி சர்க்கரைக் கூட்டிக் குடிக்க ரத்தம் பித்தம் தீரும். வாயில் வரும் ரத்தத்திற்கு இலவன் புஷ்பம் இலை அரைத்து பசும் பச்சைப் பாலிற் குடிக்க வாய் ரத்தம் ஒக்காளமும் தீரும்.

****

அஷ்ட லோக மாரணம்:-

நன்றாக அஷ்ட லோக மாரணம் மருவிக் கேளும்
மன்றாகும் அஷ்ட லோகத்துக்கு பார்ச்சிடு காரஞ் சாரம்
வெள்ளை வீரம் பூரம் வெள்ளையும் வெடியுப்போடு
அன்றாகச் சமனாய் சேர்த்து அடித்தந்த கெந்தக முதம்.

சூதமாம் மந்தை யெல்லாம் கூட்டிடு சமனாய் நீயும்
வாதமாம் பழச் சார் விட்டதன் உப்புச் சுன்னம் வெடியுப்புச் சாரம்
சீனங் கூட நல்மொன்றாக கூட்டி நீ வைத்திடாயே.

கூட்டி நீ வைத்துக் கொண்டு கொள் சரக்காறு பதினை
நாட்டியே கிளியாய் கூட்ட நலமொரு மண்டலந்தான்
ஆட்டிடு அத்தியாச்சு ஆனதோர் பாஷாணங்கள்
நாட்டினில் சுத்தி செய்ய வயித்தியம் நன்றாக மதித்தும் பின்னும் கேளு

வெதமா அஷ்ட லோகமெல்லாந் தகடாய் தட்டி
யெதமா மீனத்தாக் கெல்லாமிடைக்கிடை மருந்தைப் பூசே.

பூசியே உலர வைத்து புடச் சட்டி தனில் பரப்பி
வாசி மேல் சட்டி மூடி மண்ணாலு சீலை செய்து
தேசியே கெஜ புடத்தில் சிறந்திட பற்பமாகும்
ஆசியே லோகமெல்லாம் வகை வகையாகும் பாரு.

லோக செந்தூரம்:-

பாரு நீ லோக பற்பம் படிப்படி வெவ்வேறாகச்
சீருடன் செய்து கொண்டு கிடமுடன் செந்தூரங்கள்
ஆரணி செய்யும் போது அடவினைக் கூட்டி ஆட்டு
பாரு நீ பற்ப மென்ற வகை யெல்லா மாவே பாச்சே.

சகல மூலிகையும் அறுபத்திநாலு பாஷாணமும்
பாச்சுவாய் அனேக சமயேகமாக வெல்லத்தோர் சரக்கு சுத்தி விபரத்தை கேளு
நல்லதோர் மேனிச் சாறு நவின்றதோர் தகாளிச் சாறு
வல்லதோர் கையான் சாறு மத்தியின் சாறுதானே.

சாறுதான் பழச்சாறோடு தன்னுடன மரி கூட்டி
வாறுதான் காடிக் கூட்டி வைத்திடு மருந்து கேளு
வீரவிரு மென்று சென்றால் உலர்த்தியே வைத்திடாயே.

வாட்டிடும் சேத்து மத்தில் வந்திடும் வாமாகில்
நாட்டிய கால்கள் இரண்டும் நரம்பெல்லாம் வலித்து நிற்கும்
கூட்டிய பிடரி காதுங் குன்னவே வலிக்கு மாகில்
நாட்டிய விதியின் மேலாய் நாக்கு வாய் இழுந்தானே.

சதானந்த வயிரவன், சதானந்த வயிரவ வாகராஜன் :-

~~[illegible]~~ பாரப்பா புலத்தியனே சதானந் தர்கள்
பரிவான வயிரவன்றன் சொல்லக் கேளும்
சேரப்பா திரிகடுகு செப்பு நாவி
திறமான வெரிச்சலோடு பொரிச்சலேமும்
நீரப்பா சமன் கூட்டி பழச் சாற்றிலாட்டி
நிசமான நால் ஜாமமரைத்துக் கொண்டு
தாரப்பா குன்றி போல நிழலுலர்த்தித்
தப்பாமல் செப்பில் வைத்து கொல்லக் கே..

கேளப்பா இஞ்சி யுடனுள்ளிச் சாறும்
கெடியான முலைப் பாலில் கொடுத்தாயானால்
தாழப்பா தோஷமென்ற தெல்லாம் போகுந்
தப்பாது ஜன்னி சுரம் தீரும் தீருங்
கோளப்பா வாராது செல்லக் கேளு
குடி போகுஞ் சதானந்த வயிரவனைக் கண்டால்
தேளப்பா ராசனந்தன் வயிரவனந்தன்
செப்புகிறேன் சிவப்பூறல் பொரிதானெட்டே.

எட்டப்பா நாவி யிரு நால்மாகும்
இதமான திப்பிலியும் பனிரெண்டாகும்
தட்டப்பா யிஞ்சி ரசந் தன்னிலாட்டி தளமாகநல் ஜாமம் அரைத்துக் கொண்டு
விட்டப்பா மிளகு போல் நிழலுலர்த்தி விருதாகச் சிமிழில் வைத்து சொல்லக் கேளு
அட்டப்பா அனுபான மறிந்து போடு அப்பனே ஜன்னி யென்ற மூலம் போமே.

போமப்பா வரகராஜன் தன்னைக் கேளும் புதுமையா வேந்தகேடு நாற்கங் காதம்
சேரப்பா அப்பிரகந் தாம வீர பற்பம் கிரமாக அஞ்சு விதஞ் சமனாய்க் கூட்டி
காமப்பா வெள்ளைச் சாரணையின் சாத்தால் தளமாக நால் ஜாமம் அரைத்த பின்பு
வேமப்பா சீந்திலுட கசாயந் தன்னில் வெகு சுருக்காய் நால் ஜாமமரைத்திடாயே.

அரைத்திடு வாய் கொடிவேலி கசாயந் தன்னில் அப்பனே துளசிச் சார் திரிபலையின் கசாயம்
அரைத்திடுவாய் வெவ்வேறே ஜாமம் இரண்டு அப்பனே மொத்தையா யுருட்டி கொண்டு
அரைத்திடுவாய் சாரணையினிலை யரைத்து அப்பனே மருந்தை யுள்ளே வைத்து மூடி
அரைத்திட்ட யிலை கருகப் புடத்தைப் போடு அரசார பின்னெடுத்து அரைக்கக் கேளே.

அக்கினி குமாரன் :-

கேளப்பா சித்திர மர்மூலி கசாயங் கிருமையாய் ஜாமமரைத்துக் கொண்டு
நாளப்பா மும்மூன்று விராகனிடை வீதம் நலமானவே யுருட்டிக் கட்டிக் கொண்டு
நாளப்பா நிழலிலுர்த்தி செப்பில் வைத்து தளமான ஜன்னி வகை தோஷமெல்லாம்
வேளப்பா அனுபான மறிந்து போடு வெகு சுருக்காய் வாதமெல்லாம் விழப் போமே.

சுயமக்கினி :-

போமப்பா சுயமக்கினி சொல்லக் கேளும் புகழான ரச மூன்சம் நாகம் ரெண்டும்
காமப்பா காந்த செந்தூரம் நாலும் கலங்காத சீலை ரெண்டு சிகப்பு ரெண்டு
நாமப்பா நிச்சனை செந்தூரம் பத்து தவறாமல் ஒமரிச் சார் அரைக்கக் கேளு
ஆமப்பா பக்ஷமொன்று அரைத்துருட்டி அப்பனே இஞ்சி ரசம் திரிகடுகு தானே.

நாளிலே தேன் கூட்டி பணவிடை தான் போட்டு தொடர்ந்து அரை மண்டலந்தான் கொண்டாயானால்

நாளிலே யக்கினியா மந்தந் தீரும் நடாத பீலிகை குன்மம் வாய்வு
தேளிலே வாய்வென்ற தெல்லாந் தீருந் திரமான கவிதையொடு பாண்டுந் தீருந்
நாளிலே சீரமெல்லாம் சுருக்காய் தீரும் சுகமாகும் பத்தியந்தான் புளிப்பு கார்ப்புத் தள்ளே.

தள்ளவே இன்னமொரு சேதி கேளுந் தயவான வெங்காரமொன்று தேக்காள் இரண்டும்
விள்ளவே வுரைப்பொருத தான் நாவங்கட்டி விதானக் குமரிச் சாறு தன்னிலாட்டி
பள்ளவே நாலச் சாமமரைத்துருட்டி பாங்கான எருக்கிலையில் சுத்திக் கட்டி
கள்ளவே பாண்டத்தில் பற்பம் வைத்து கலங்காதே பொடி செய்து திரிகடுகில் கொள்ளே.

வன்ம மாத்திரை:-

கொள்ளடா தேன் கூட்டி மண்டலந்தான் கொடிதான வன்ம மெட்டும் ஊரிகையும் தீரும்
நல்லடா பாண்டு வகை யெல்லாம் தீரும் தனமான அக்கினி மாந்தந் தீரும்
நள்ளடா இஞ்சி ரசந் தேனுங் கூட்டி நலமான மண்டலந் தான் கொண்டாயானால்
விள்ளடா தீரமென்ற தாபத்திலும் விட்டு கடல் புக்குமடா விரைந்து போடே.

கபாட மாத்திரை:-

போடவே கபாட மென்ற மாத்திரைதான் கேளு புகழான சாதிக்காய் பத்திரியுஞ் சாயும்
நாடவே சீரகமும் விடயம் கிராம்பு நலமான அபினி சடை வன்னி கெற்பம்
தேட்டா வெந்தயமுங் காஞ்ச விந்து திரமான குரோசாணி பனிரெண்டுந் தான்
கூடவே சமன் கூட்டி கல்வத்திட்டு அப்பனே ஆனந்த மூலிச் சாறே.

சாத்தாலே நால ஜாமமரைத்துக் கொண்டு சாதகமா யிலந்தைப் பிரமாணந் தானே
காத்தாலே மெதியென்ற தயிர் நாள் மூன்று கசங்காதே மருவிடு மூன்று நாள் தான்
வாத்தாலே வாழையுட பூவின் சாத்தால் வகையான தனிச் சாத்தில் விட்டாயானால்
வேத்தாலே ரெத்த மென்ற மூலகிராணி விதமான சலகிராணி சங்கார கிராணியாமே.

ஆமப்பா சலகிராணி வாய்வுக் கிராணி அப்பனே குளிகாக் கிராணி தீரும்
போமப்பா சோருக் கனியும் கிராணி பொருக்காதே நீர் காகக் கிராணி தீரும்
நாமப்பா வயிற்றிலுள்ள கடுப்புந் தீரும் நலமான பாண்டு வாங்கி கிராணி தீரும்
காமப்பா அதிசார கிராணி தீரும் தப்பாது புளி நீக்கிப் பத்தியம் போடே.

பூபதி மாத்திரை:-

போடப்பா சடத்திலுள்ள நோய்களெல்லாம் பூபதி தான் மருந்கொள்ளு சொல்லக் கேளு
தாமப்பா தங்கமொடு வெள்ளி நாகம் தளமான லோகமொடு முத்து ரத்தினம்
நாடப்பா சூதமொடு கெந்திலிங்கம் நலமான சிலையோடு கற்கட சிங்கிருப்பி
ஆடப்பா யிதையெல்லாம் பழம் சாத்தாலே ஆட்டியே நால்ஜாமம் வில்லை செய்யே.

செய்யப்பா ரவி யுலர்த்திய யகலில் வைத்து திறமாக மேல் மூடி சீலை செய்து
வையப்பா முப்புடத்தில் வந்து போகும் வளமாக இடையிட்ட தான் லிங்கம் கூட்டி
மெய்யப்பா முலைப் பாலால் நால ஜாமம் விட்டரைத்து விரல் நீளம் உருண்டை சேர்த்து
கையப்பா நிழலுலர்த்தி கடுசுப்பில் வைத்து கலங்காதே வயிரவர் பூஜை பண்ணே.

பண்ணியே பூபதியை முலைப் பாலுக்கு பரிவாக அரிசியிட கொடுத்தால் கேளும்
சன்னியென்ற ஜன்னி பதிமூன்றும் தீருந் தப்பாது தோஷமென்ற கேழுந் தீரும்
கன்னியே திரி தோஷங்காலமெல்லாம் காணாது கடல் புக்குக் கருதிப் பாரு
விண்ணிலே சிற்சில நின்ற சில தோஷமெல்லாம் வெகு சுருக்காய் தீருமடா விரைந்து பாரே.

பாரப்பா பூபதியை இஞ்சிச் சாற்றில் பரிவான தேன் கூட்டி கொடுத்தால் கேளு
சாரப்பா சுலமாகப் போனூர் தான் சாத்திரியப் பிராணன் வந்து சற்றுப் பேசும்
ஆரப்பா பிரம்மலி பின்னை வென்று ஆசித்துப் பேசி விட்டு மரணமாவாள்
சாரப்பா பூபதியே சொன்னேன் சொன்னேன் சாதித்து வைத்தியஞ் செய் கருமாமே.

ரசச் சிந்தாமணி:-

ஆமப்பா ரசச் சிந்தாமணியைக் கேளு அப்பனே சூதமொடு கந்தகந்தான்
நாமப்பா சிவந்த தொரு சிவந்த ரத்தம் மொடு நலமாக வகைக்கு இரு கழஞ்சிக் கூட்டி
தாமப்பா தங்கமொடு வெள்ளி முத்து தயவான பவழஞ்சிலை கெந்தி யப்பிரகம்
காமப்பா பால் விட்டரைப்பாய் சாமம் நான்கு கருவான சித்திர மூலி கசாயத்தாலே.

கசாயத்திலரைத்திடுவாய் ஜாமம் நாலு கருவாக எருக்கம் பால் ஜாமம் இரண்டு
நியா சமாமரு சாகிலடைத்துக் கொண்டு நிலவரமாய் மூலமென்ற சாம்பலுக்குள்
நியாசமாய் அரை யரையாய் வைத்து மூடி விதமாக எருசீலை மண்ணுஞ் செய்து
நியாசமாய் ரவி தனிலே உலரப் போட்டு திரமாக கெஜபுடத்தில் சென்று வாங்கே.

வாங்கியே எடைக்கிட்ட தான் சூதங் கூட்டி மைந்தனே நாபி முக்கள்ஞ்சி கூட்டி
ஓங்கியே நால் ஜாமம் திரிகடுகு கஷாயந்தான் உத்தமனே திப்பிலியின் கசாயந் தன்னில்
தேங்கியே இரு ஜாமமரைத்து பின்பு திறமாக்க் குன்றி எடை கொடுத்தால் கேளு
பாங்கி நின்ற ஜன்னிமுதல் தோஷமெல்லாம் பறக்குமடா தீர்மென்ற தெல்லலந்தானே.

தானென்ற சிந்தாமணியின் பேரை சாத்திரிலை மனா தர் நடுங்குவார் பாரு
ஏனென்று இருந்தாகால் வயித்தியோரே எய்தமோ மாத்திரை தானியம்பக் கேளு.
பானென்ற மாத்திரை தான் பல்பாயச் செய்து பரிவான உலகத்தில் வயித்தியஞ் செய்தேன்
தேனென்று வைத்தியர் காய்ச் சொன்னேனின்றால் திறமான வியாதி யென்றுல் செய்வரன் பாரே.

கோரோசனை குளிகை:-

பாரப்பா கோரோசனையின் குளிகைக் கேளு பாங்கான கோரோசனையும் குங்குமப் பூவும்
சாரப்பா கற்பூரமாசச் செந்தூரம் சார்வான பச்சைக் கற்பூரம் மேலுஞ்
சேரப்பா அப்பிரகஞ் சிராம்பு கோஷ்டம் திரமான சாதிக்காய் அக்கிராகாரம்
ஆரப்பா வகை யொன்று கழஞ்சி மூன்று அப்பனே கலசத்தில் பொடித்துக் கொள்ளே.

பொடித்ததனை அரைப்பதற்கு கஷாயங் கேளு புகழான சந்தனத் தூள் கசாயஞ் செய்து
வடித்ததனை ஜாமமிலரைத்துக் கொண்டு வளமான லவங்கப் பூ கசாயஞ் செய்து
கடித்திட்டு இரு ஜாமமரைத்துக் கொண்டு குருவிக் குன்றி போலுண்டை செய்யே.

உண்டை செய்து நிழலுலர்த்தி செப்பில் வைத்து உத்தமனே முலைப் பாலில் கொடுத்தாயானால்
கொண்டை கட்டுஞ் சிலேஷ்மங்கள் கொல்லூர்த்தாலுந் தலைந்து போம் ஜன்னியெல்லாம் சொல்லாதோடும்
மண்டைக் கட்டுஞ் சூலை முதல் நீர் தோஷங்கள் மயக்கமொடு சிலேம சுர மான்டு போகும்
சண்டையிட்டு வெந்தகொடு வலியுப்சிர் சீந்த வறண்டு போகுமடா இன்னம் கேளே.

பூமனி மாத்திரை:-

போகுமடா பூமனி தான் சொல்லக் கேளு கிருபையாம் ரோகணி, மிளப்பைப் பூவும்
நாளட வானமது ரெட்டிடிச் சேர்த்து நலமாகக் குமரிச் சார் தன்னிலாட்டி
வேளடா நால் ஜாமமரைத்துக் கொண்டு விதமான நாரத்தங்காய் போலுருட்டி
நாளடா நிழலுலர்த்தி செப்பில் வைத்து நலமான இஞ்சிச் சார் தேனுங் கூட்டே

கூட்டியே மாத்திரை தான் ஒன்று சேர்த்து குழப்பியே காலமே கொடுத்தால் கேளுந்
திட்டியே ஜன்னி சுரமெல்லாம் தீரும் நலமான விச்சுரமும் நாடாதோடுங்
காட்டிய தோருள்ளி யென்ற தைலத்தோட்ட மடியான தோஷமெல்லாந் தீரும்
வாட்டியே யென்னையில் கொடுத்தாயானால் வாங்கி விடு வாயு வெல்லாம் வாங்கிப் போமே

அர்த்த நாரீஸ்வர மாத்திரை:-

போமப்பா அர்த்தநாரீஸ்வரனைக் கேளு புகழான குகமொடு நாபி கெந்தி
நாமப்பர் வெங்காரஞ் சமனாய்த் தாக்கி நலமாக நொச்சியிலைச் சாற்றிலேதான்
வேமப்பா இரு ஜாமமரைத்துக் கொண்டு விதமான முகையிலிட்டுச் சீலை செய்து
தாமப்பா மண் செய்து சட்டிக்குள்ளே கூடவாக உப்பை யிட்டுக் குகையை வையே.

வைத்ததிலே மேலுமந்த உப்பைக் கொட்டி வாகாக மேல் சட்டி கொண்டு மூடி
தைத்ததிலே சீலை செய்து அடுப்பிலேற்றி தப்பாமல் கமல அன்னி நால ஜாமம்
வைத்ததிலே ஆற வைத்து எடுத்துக் கொண்டு நலமான செங்கள நீர் சாற்றிலே
வைத்ததிலே நால் ஜாமமாட்டிக் கொண்டு பருவமுடன் நொச்சிச் சாரை விட்டு ஆட்டே.

ஆட்டப்பா நால் ஜாமம் பாகல் சாத்தால் அப்பனே நால் ஜாம மாட்டிக் கொண்டு
நாட்டப்பா ரவி சுத்திலர்ந்த பின்பு நன்றாகக் குழாயிலே அடைத்துக் கொண்டு
மூட்டப்பா பனிவிடை தான் முன் சாத்தில் போட்டு முறையாகக் கொடுத்திடவே சுரங்கள் தீரும்
காட்டப்பா யிரு நாசி ஒரு நாசி நீக்கி கருவான முன் சாத்தில் நசியம் பண்ணே.

பண்ணப்பா ஒரு புறத்தில் சுரந்தான் நிற்கும் பக்குவமாய் ஒரு புறத்தில் நசியம் பண்ண
தண்ணப்பா யிரு புறமும் தவிந்து போகும் தப்பாது ஆட்டுப் பால் தந்தி கொள்ள
நன்னப்பா உனக்காக சொன்னேன் கேள் நாட்டிலுள்ளோரிதை யறிந்து யார்தான் செய்வார்
கண்ணப்பா ஒளிப்பில்லை சொல்லிப் போட்டேன் கருவான வைத்தியத்தின் கருவைக் கேளு.

சிலோதாரி மாத்திரை:-

காணப்பா சிலோகாரி மணியைக் கேளு கருவான பொரியோடு திரிகடுகு சீனம்
நாணப்பா கடல் நுரையுங் குரை வித்து நலமான இந்துப்புக் காயமொன்று
வாணப்பா நேர்வாளம் இரண்டு கூட்டி வகை பத்து மின நீரால் முத்ஜாமமாட்டி
நாரப்பா யிவை யிவை பிரமாணந்தான் தப்பாமல் நிழலுலர்த்தி செப்பில் வையே.

வைத்தப்பா இஞ்சி நீர் தேனுங் கூட்டி வளமான மாத்திரையைக் கொடுத்தாயானால்
சாத்தப்பா வாயுவொடு வாதமெல்லாம் சார்ந்தமா பித்த மெல்லாங் கீழே சாரும்
ஆத்தப்பா மதுவிலே விட்டாயானால் மந்தமொடு உப்பிசமும் வாங்கிப் போகும்
ஒத்தப்பா நீரடைப்புச் சலமடைப்புத் தீரும் இதமான சிலோதாரி என்று தானே

கருச்சாலை லேகியம் பாண்டுக்கு:-

காணப்பா பாண்டு வகை யாவுந் தீர கரிச்சாலை லேகியந்தான் செல்லக் கேளு
நாலப்பா பொற்கையான் சாறு படி இரண்டு நலமான நெரிஞ்சி சார் படி தான் ரெண்டு
வாணப்பா சிறுகீரைச் சாறு படி ஒன்று வளமான பொடுதலைச் சார் படி தானென்று
நாணப்பாக் கீழாக் காயின் நெல்லிச் சாறு தருவான செருப்படிச் சார் படி தானென்றே.

ஒற்றப்பா பழச் சாறு படி தானென்று உத்தமனே நெல்லிச் சார் படி தானென்று
சென்றப்பா கசாய வகை சொல்லக் கேளு திறமான நாவலொடு கருங்காலி யத்தி
நன்றப்பா தென்னம் பூ வகை யொன்றுக்கு நலமானக் பலமஞ்சு இடித்துக் கொண்டு
கன்றப்பா நீர் எட்டொன்றுக்கி கருவான சாத்துள்ளே கூடச் சேரே.

சேர்க்கவே கசாயமொன்று சொல்லக் கேளு செப்புறேன் பிரண்டையொடு கரிசலை மூலம்
மார்க்கமா மவுரியோடு சித்தாமுட்டி வளமான பேராமுட்டி விளாமிச்சோடு
தீர்க்கமாய மூன்றும் நிசத்துக் கொண்டு திறமாக யிடித்தலை தர வி நீரில்
தீர்க்கமா யெட்டொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு திறமான கசாயந் தன்னில் கூட்டே.

கூட்டுவாய் புளை வெல்லம் பலந்தானெட்டு சீனா கன்னல் வெல்லம் பலந்தானெட்டு
ஆட்டுவாய் ஆவின் பால் படி நாலுக்குள் வளமாகக் கரைத்து விட்டு சொல்லக் கேளு
காட்டு வாய் அடுப்பேத்திப் பாகுச் சேரில் கருவான சீரக மேலந் திராம்பு
நீட்டுவாய் சாதிக்காய், சாதிபத்திரி நினைப்பாக ஓமமொடு குரோசணியாமே.

ஆமப்பா நாகப்பூ, கர்க்கடக சிங்கி வுப்பனே கோஷ்டமொடு அக்கிரா காரம்
தாமப்பா மதூரமொடு தாளிச பத்திரி தப்பாமல் திரிகடுகு திரிப்பலாதி
நாமப்பா வகை யொன்று பலந்தானென்று நலமாகச் சூரணித்துப் பாகில் தூவி
வேமப்பா கிண்டையிலே ஆவி நெய்தான் வெகு சுருக்காய் படி யரைதான் விட்டுக் கிண்டே.

கிண்டப்பா தேனதிலே படி தான் விட்டு திருபையாய் திரிலோகஞ் செந்தூரந்தான்
தாண்டப்பா பலமொன்று கூடப் போட்டு தப்பாமல் மண்டூரம் பலந்தானென்று
மண்டப்பா கிண்டி யதை மெழுகாய் வாங்கி மகத்தான புன்னைக் காயளவு வீதம்
கொண்டப்பா மண்டலந்தான் சென்றதானால் குறை கெட்ட வெண்பாட்டு பறகலாச்சே.

ஆச்சப்பா பாண்டு வகை யெல்லாம் போகும் அப்பனே பித்த வெட்டை காகால் எச்சல்
காச்சப்பா காந்தலுடன் எரிவு போகும் கனமான வாந்தியோடு மயக்கந் தாகம்

ஒச்சப்பா விக்கலொடு நீர்ச் சுரப்பு உத்தமனே கிராணி யெல்லாம் ஒழிந்து போகும்
நீச்சப்பா அரோசிகங் களன்ன தோஷம் நிசமாக அகல கெந்தி தைலஞ் சேரு.

<u>கண்டங்கத்திரி</u>:-

முழுகவே கண்டங்கத்திரி லேகியஞ் சொல்வேன் முற்சமா மிஞ்சிச் சாறு படி தானென்று
நீக்கவே கண்டங் கத்திரியின் சாறு நிலைவாகப் படி யொன்றுங் கூட விட்டு
தாளக்கவே நெரிஞ்சிச் சார் படி தானென்று தப்பாமல் முள்ளங்கிச் சார் படி தான் விட்டு
வீளக்கவே பழச் சாறு படி தான் விட்டு விழுதான ஆவின் பால் படி தான் ரெண்டே.

ரெண்டான பனைவெல்லம் படி தான் ரெண்டு ரேசிக்க அடுப்பேத்திப் பாகு சேரி
குன்றுன திரிகடுகுஞ் சீரகமும் ஏலம் குமவான வாய் விளங் கிராம்பு தாளிசம்
நன்றாக பலமொன்றுச் சூரணித்து நலமான பாகதிலே தாவித் தாவி
செண்டான ஆவின் நெய் படி யரைதான் விட்டு திறமாகத் தேனதிலே கால் படி தான் வாரே.

வாக்கப்பா கிண்டியதே மெழுகு போலே வளமான லேகியத்தைப் பதனம்பண்ணு
பாக்கப்பா பாக்களவு விதமாக பதராமல் இரு நேரங் கொள்ளுங் காலம்
காக்கப்பா மண்டலந்தான் கொண்டாயானால் கலங்காத வாதமொடு வாயுவெல்லாம்
பேத்தப்பா பித்தமொடு வாந்தி சூலை பிரபலமா யிசுவு முதல் பறந்து போமே.

போமப்பா அரோசிகங்கள் அன்ன தோஷம் பொருகாத குன்மமெட்டும் பொருமல் கக்கல்
நாமப்பா பித்தத்தின் கபாலக் குத்து நாடாத மயக்கமெல்லாம் நடுங்கி போகும்
கேமப்பா ஓமரியுடத் தைலம் முழுகு திறமான பிக்கோய் தீருந்தானே.

<u>பஞ்ச தீபாக்கினி</u>:-

தானென்ற பஞ்ச தீபாக்கினி தானும் தருகின்ற லேகியந் தான் சொல்லக் கேளு
வானென்ற திரிகடுகு ஏலஞ் சீரகம் வளமாக வகை யொன்று பலந்தானென்று
பேனென்ற யிலவறுப்பாய்ச் சூரணித்து பெரிதான ஆவின் பால் படி தான் ரெண்டு
தேனென்ற பனைவெல்லம் படிதான் ரெண்டு சிறப்பாகக் கரைத்ததிலே பாகு செய்யே.

செய்யப்பா சூரணத்தைத் தாவி கிண்டி திறமான கேநெய் தான் உரி உழக்கு
கைய்யார விட்டிலே கிண்டி கிண்டி கருவாக மெழுகு பதம்மாக வாங்கி
மைய்யப்பா கழுவு இரு நேரந்தான் மண்டலந்தான் கொண்டாயானால்.
தையப்பா தீருகின்ற வியாதி கேளு தருவான வாய்வோடு வாதம் போம.

ஆமப்பா பித்தங்கள் உஷ்ண வாய்வு அப்பனே சரீரத்தில் உளவு குத்து,
போம்ப்பா வலி கருப்பு யெரிச்சல் பேதி பொருமலுடன் வாய்வென்ற கிராணி தீரும்
வேமப்பா அஸ்தி சுரம் அஸ்தி வெட்டை விடதான வாந்தி யெல்லாம் விழாய்ப் போகும்
சாமப்பா அரக்கிருட தைலம் மிளகு சகல சுரம் விட்டோடும் சாற்றுவாரே.

<u>கண்டங் கத்திரி</u>:-

சார்வாக லேகிய மொன்று சொல்லக் கேளு சாற்றுகிறேன் கண்டங்கத்திரி பலந் தாக்குப்பா
அரவாக இடித்ததனைத் தாவி நீரில் அப்பனே விட்டொன்றாய்க் காய்ச்சி விட்டு
சேர்வாக பனைவெல்லம் பலந்தான் பத்து சேர்த்ததிலே பால் படி தான் பாகு சேரி
சார்வாக திரிகடுகு திரிபலாதி கருவானவாய் விளங்கம் ஓமமர்மே.

சமமொடு குரோசாணி வெங்கப் பட்டை சீரகமும் நமக்கு மூலம் உத்தமனே
நாம மொடனத்தில் திப்பிலியுங் கோஷ்டம் நலமான தாளிச மக்காராக் காரம்
வாழமொடு வகை யொன்று பலந்தானென்று வளமாகச் சூரணித்துப் பாகில் தாவி
சேமமொடு ஆவின் நெய் படி கால் விட்டு திறமான தேனதிலே படி கால் வாரே.

வார்த்ததிலே கிண்டியதை மெழுகு போலே வளமான லேகியந் தான பாக்கு வீதம்
பகத்திலே யிரு நேரங் கொண்டாயானால் பறக்குமடா கிறுல் வாதம் பாரி சூலை

சேர்த்திலே கிருமியொடு புழுக்களெல்லாம் கிரேகத்தை விட்டோடுஞ் சொ்ப வாய்வு,
சார்த்திலே உளபடினுய் பித்த மெல்லாம் சாராத சித்காதி லேகியம் கேளே.

சித்காதி லேகியம்:-

கேளப்பா ஆறு மாக்குச் சென்ற. காடி கிருமையாய் படி பத்து புளித்த மோரு
நாளப்பா படி பத்துக் கூட விட்டு நலமான புளியிலை ஆக்கிடித்துப் போட்டு
கேளப்பா சுருப்பிடித்த இரும்பைத் தான் போட்டு கொதிக்க வைத்து எட்டொன்று யிருத்திக் கொண்டு
வேளப்பா கையான் சார் படி கான் ரெண்டு விருகான இஞ்சிச் சார் படி தாஜென்றே.

~~ஒன்றன பழச் சாறு படி தாஜென்று உத்தமனே நெரிஞ்சிச் சார் படி தாஜென்று~~

ஒன்றன பழச் சாறு படி தாஜென்று உத்தமனே நெரிஞ்சிச் சார் படி தாஜென்று
சென்றன சிறு கீரைச் சார் படி. தாஜென்ற செருப்படி சார் படி காஜென்று தென்ம்பு சார்
பன்றன படி யொன்று கீழ்க்காய் நெல்லி பகராமல் படி யொன்று கூடச் சேர்த்து
கன்றன ஆவின் பால் படிகான் நாலு கருவான பனைவெல்லம் படிநான் பத்தே.

பதக்கா கரைத்து விட்டுப் பாகுச் சேரில் பக்குவமாய்க் கடைச் சரக்கு
திரிபலை க்டுகு, ஒமர்தான் திரிபாலை கோஷ்ட மாஞ்சில் நலமான சீரகமும் வால் மிளகு ஏலம்
சுத்தான கிராம்பு காளிச் பத்திரி கருவான லவங்கத் தோலானைத் திப்பிலி
ஒத்தாகப் பல மொன்று தகதி கொண்டு உறவாக இளவருப்பாய்ச் சூரணந் தான் செய்யே.

செய்யப்பா முன்பாகில் தூவி கிண்டி செயமாக ஆவி நெய் படி தான் வார்த்து
கொய்யப்பா தேனதிலே படிகான் விட்டு குழம்பான லேகியத்தைப் பதனம் பண்ணு
கையப்பா இரு கள்ஞ்சி இரு நேரங் கொள்ள பக்குமடா பாண்டு கை எல்லாந் தீரும்
மெய்யப்பா பித்த வெட்டை பித்த வாய்வு மயக்கமொடு அக்கினியா மந்தந்தானே.

மந்தமொடு வெறுப்பான கிரேக மெல்லாம் வண்டு போல கருக்குமடா மண்டலத்தில்
மந்தமாம் மகோதரங்கள் பீலிகையாம் வாய்வு மகத்தான சோகையோடு கிராணி மூலம்
பொந்தமா முடம்பெரிவு யீளை இரைப்பு பொருமலுடறுப்பிசங் களிரைச்சல் தீரும்.
பந்தமாய் பத்தியங்கள் காத்துத் தின்று பக்குவமாய் மண்டலத்தில் சொல்லக் கேளே.

மகா வில்வாதி:-

சொல்லக் கேள் புலத்தியனே இன்னமொன்று சுருக்கான நோய்க்கெல்லாம் மகா வில்வாதி
வல்லக் கேள் வில்வத்தின் மூலமப்பா வளமாகப் பலம் நாறு வெட்டி வந்து
நல்லக் கேள்விளாமிச்ச வாகைப் பத்திரி ஞலமான நன்னாரி நல் விதியும்
அல்லக் கேள் சித்தாமல்லி பேராமல்லி வளமான சிறு விளா வேருமாமே..

ஆமப்பா சிவாகைமுன்னையோடு அப்பனே முசுமுசுக்கை கொடி வேலித் தேத்தான்
நாமப்பா வகை யொன்று பல மூன்றும் நலமாக யிடி நன்றாய் இரு தூணி நீரிலே
வேமப்பர் எட்டொன்றாய் வடித்துக் கொண்டு வெறளாதே குமட்டி மாதளம் பழச் சாறிஞ்சு
காமப்பா சாறு படி யொன்று விட்டு கலங்காதே சர்க்கரை சேர் நாலும்மே.

ஆமப்பர் ஆவின் ப்பால் ப்படி தான் ரெண்டுஅப்பனே கரைத் தெல்லாம் பாகு சேரில்.
போமப்பா திரிகடுகு, திரிபலாதி புகழான வங்கமொடு ஏலம் கோஷ்டம்
நாமப்பா மதுரமொடு கெந்தகம் சீரகமிரண்டு நலமான விளங்கமொடு சாஸ்திர பேதி
வாமப்பா காளிசம் செண்பகப்பூ. வழுக்கிழுன் வளமான மல்லி விளாவரிசி தேக்கே.

தேக்கான முந்திரிகை பெரிந்த வில்வம் திறமான வாலுளுவை மாஞ்சில் சிறு நாகம்
பாக்கான நாங்கணமும் பரித்த வித்து பகருவேன் நிம்ப வித்து இலுப்பைப் பூவும்
தூக்கான வகை யொன்று பலமொன்றுக குரலித்துப் பாகத்திலே தூவி கிண்டி
நீகான தேனதிலே படி யரைதான் விட்டு ~~நிகைாக~~ நினைவாக ஆவின் நெய் படி கான் வாரே.

வத்தப்பா மெழுகு போல் கிண்டி கிண்டி வளமான லேகியத்தை பதனம் பண்ணு
கொத்தப்பா லேகியத்தைப் புன்னைக் காயளவு கொண்டு வர இரு நேரம் தீரும் நோய் கேளே
சத்தப்பா சுவாசமொடு வரோகிகத்கள் சுவருக விக்கலொடு சத்தி யெரி பாண்டு
காத்தப்பாவிஷ பாண்டு வயிற்கெரிசசல் சனமான உப்பிசங்கள் கிராணி போமே.

போமப்பா கை காலெரிவு காந்தல் புகழான வெள்ளோகாள மெற்ற தோஷம்
நாமப்பா சூலையோடு கூடியந்தானெட்டு நலமான கரப்பான்பத்தியும்
தாமப்ப்பா பித்தமொடு நாற்பதுந் தான் தளமான அஸ்தி சுரம் மருந்தீடெல்லாம்
ஆமப்பா அதிசார முன்னில் ரோகம் அருளான லேகம் வைத்துக் கொள்ளு கொள்ளே.

சம்பங்கி லிவ்வாதி:- 28.2.63.

சொள்ளவே யின்ன மொன்று சொல்லக் கேளு குணமான சம்பங்கி லிவ்வாதி லேகியம்
தெள்ளவே சிறுகாமுட்டி சித்தாமல்லி திறமான பேராமுட்டி பெருமல்லி சுந்தல்
விள்ளவே விலவ வேர் முக்கா வேளை வீறான சங்கம் வேர் வகை யொன்றப்பா
நள்ளவே வெள்ளுள்ளி சாரணை வேர் கண்டங் காலி நலமான விளாமிச்சை சீந்தி தானே.

தானென்ற கொடி வேலி பொன் முசுட்டை தளமான நன்னாரி சிறு தேக்கப்பா
வனென்ற முசலி வகை பதிமூன்றுந் தான் வளமாகப் பலமைந்து இடித்துப் போட்டு
வேனென்ற ஆத்தி நீரிலூரவிட்டு விளங்கவே யெட்டொன்று யிறுத்துக் கொண்டு
கானென்ற கன்னல் வெல்லம் சேர் காணும் கருவான ஆவின் பால் படி ரெண்டு சேரே.

சேரப்பா கரைத்ததிலே பாகு செய்து திறமான திரிகடுகு திரிபலாதி
வாதத்திலே கிராம் பேல யிரு சீரகந் தான் வளமான கோஷ்டம் தாளிச பத்திரி
சாதத்திலே ஓமம் ரெண்டு அரைத்துக் கொண்டு தாமான கொத்தமல்லி லவங்கப் பட்டை
ஆதித்தியக்கிராகார. மத்தி திப்பிலி அப்பனைவால் மிளகு சாதிக்காயே.

ஆமப்பா அதிவிடயம் கிராம்பு திப்பிலி அப்பனே சாதிபத்திரியு மாகும்
நாமப்பா வகை யொன்று பலமொன்றுக நலமாக இள வறுப்பாய்ச் சூரணித்து
சேமப்பா பாகதிலே தூவி கிண்டி திறமான தேன் நெய் விட்டிறக்கி கிண்டி
நாமப்பா குழம்பு போல் வாங்கி வைத்து. நலமாகக் களஞ்சி நிறை யிரு நேரங் கொள்
தாமப்பா பித்த வெட்டை பாண்டு ஆமந் சுவுண்டு போமடா கூடியமுந் தானே.

தானென்ற குன்ம மெட்டுங் கிராணி ஆமம் தாமான வாய் கசப்பு வெள்ளோக்காளம்
தேனென்ற பித்தமது நாற்பதுந் தான் தீருமடா வாயூறல் கினி மந்தந்
திறமான சூலையொடு கை கால் காந்தல் பானென்ற பித்தமது நாற்பதுந் தான்
பறக்குமடா மண்டலத்தில் பாரிந்து கொள்ளே.

தள்ளப்பா திரிலோகம் வைத்துக் கொள்ளு தளமான வால் ரசச் செந்தூரந்தான்
கொள்ளவே லோக செந்தூரம் வைத்து குறையாமல்ப் பலவிடை தான் வைத்துக் கொள்ளு
தள்ளப்பா பித்த மென்ற தெல்லாம் போகும் தருவான சிலேஷ்மங்கள் தொன்னூற்றாறும்
விள்ளவே கட்டலப்புங் குங் கண்டு கொள்ளு விருதான இன்னமொரு சேதி கேளு.

கண்டங்கத்திரி லேகியம்:-

கேளப்பா மகத்தான கண்டங்கத்திரி செடியான லேகியந் தான் சொல்லக் கேளு
நாமப்பா ஆத்து முள்ளி பலந்தானுடும் நலமான கரி முள்ளி அதற்குப் பாதி
காளப்பா சிறுகாமுட்டி பேராமுட்டி களமான முசுமுசுக்கை கொடிவேலி விளாவும்
ஆளப்பா ஆதண்டை சிறுகாஞ்சொறி அப்பனே விளாமிச்சை முகா வேளையாமே.

ஆமப்பா கஞ்சாங் கோரை உத்தாமணியும் அப்பனே சுழக் கொடியும் விலங்கு
தாமப்பா வகை யொன்று பல மொன்றுக தவுமிடித்து யிரு நாழி நீரில்
வேமப்பா யெட்டொன்று யிறுத்து வாங்கி விருதான கொமட்டிச் சார் படி காலென்று
நாமப்பா படி யரைதான் தேனுங் கூட்டி நலமான ஆவின் பால் படி தான் ரெண்டே.

இரண்டான சர்க்கரை தான பலமுமைந்து நிறைவாகக் கரைத்ததிலே பாகுஞ் சேரில்
கண்டான கடைச் சரக்கு சொல்லக் கேளு கருவான திரிகடுகு திரிபாதி
நன்றான சிந்தி யிருஞ் சீரகந் தான் நலமான அரத்தை யதிமதுரம் லவங்கப் பட்டை
கண்டான லவங்கந் சாதிக்காய் பத்திரி தளமான பேரரத்தை லவங்கப் பத்திரியுங் கூட்டே.

கட்டுவாய் வகை யொன்று பலமொன்றுக கசாமலின வறுப்பாய்ச் சூரணித்து
நாட்டுவாய் பாகிலே தூவி கிண்டி நலமான தேன் படி நெய்யரை தான் விட்டு

காட்டுவாய் மெழுகு போல கிண்டி கிண்டி கசங்காமல் பீங்கானில் வழித்து வைத்து
ஈட்டு வாய் லேகியந் தான் புன்னைக் காய் விதந் திரமான மண்டலத்தில் தீரும் நோய் கேளே.

கேளப்பா க்ஷய மெட்டுங் குன்ம மெட்டும் கெடியான வர்த்த மென்ற தெண்பத்திரும்
நாளப்பா யிரை கிளைப்பு விஷ நீர்க் கோவை நாடாது இசிவு வலிகுழல் வாதங்கள்
தாளப்பா தெற்ப்ப வலி தெற்ப்பச் சூலை தவறண்டு போகுமடா புக்கெல்லாம்
ஆளப்பா தாளகமும் லோகங் கூட்டி அப்பனே கொண்டு வர தீரும் பாரே.

கபாட லேகியம்:-

பாரப்பா கபாடமென்ற லேகியஞ் சொல்வோம் பண்பான நாவலொடு அரசு சுத்தி
சேரப்பா கருங்காலி உசியம் பட்டை திறமாகப் பலம் பத்து நிறுத்துக் கொண்டு
சாரப்பா இடித்து நன்று யிரு நாழி நீரிலே தாமாக அடுப்பேத்தி எட்டொன்றுக்கி
வாரப்பா பனவெல்லம் பலந்தான் பத்து வளமாகக் கரைத்ததிலே பாகு சேரே.

பாகிலே தூவுதற்கு மருந்தைக் கேளு பதருகே கஞ்சாவைச் சுத்தி செய்து
பாகிலே பலமொன்று தாக்கிக் கொண்டு பாங்கான மிளகு சுக்கு சீரகத்தோடு
பாகிலே ஓமமொரு குருசாணி பருவமாய்ச் சிங்கி காய்த்திப் பூவும்
பாகிலே சிறு நாகம் வால் மிளகு பருவமாய் மல்லியொடு ஏலமாமே.

பாண்டு வாய்வு உஷ்ண வாய்வு கிராணி:-

ஆமப்பா கிராம்புடனே ஜாதிபத்திரி அப்பனே ஜாதிக்காய் விடயந் திப்பிலி
ஆமப்பா வகையொன்று பலமொன்றாக நலமாக யிவ வறுப்பாய்ச் சூரணித்து
வேமப்பா பாகிலே தாவித் தாவி வெகு சுருகாய் தேன் விட்டு கிண்டி
சாமப்பா பீங்கானில் பதனம் பண்ணு தப்பாமல் மண்டலந்தான் பாகளவாய்க் கொள்ளே.

அளவாக கொண்டு வர தீரும் நோய் கேள் அப்பனே சூதிகாய வாய்வு கிராணி
அளவாகப் பேய் பூதம் பாண்டு கிராணி பங்கான பேதியொடு உஷ்ண வாய்வு
கிளனாக மூலக் கடுப்பு கிராணி யெல்லாம் தீரும் வளமாக இன்னமொரு வரிசைக் கேளே.

பாளப்பா திப்பிலி ரசாயனந் தான் சொல்வேன் பகருகின்ற திப்பிலி தான் பலந்தான் பத்து
மிளகைந்து சுக்கைந்து திறமான யிரு சீரகம் ஓமம் ரெண்டு

ஆரப்பா அரத்தை யொன்று தாளிச பத்திரி அப்பனே லவங்கப் பத்திரியுடன் பட்டை
ஜாதிக்காய் திரிபலாதி லவங்க மேலும் தனமான கொடிவேலி பலமொன்று தாக்கே.

தாக்கியே இள வறுப்பாய்ச் சூரணித்து சுகமான சர்க்கரை தான் சமனாய் கூட்டி
தாக்கியே தேன் கூட்டிப் பிசைந்து கொண்டு தப்பாமல் விரல் கடிதான் கொள்ளும் போது
தேகியே இரைப்பொடு இருமல் காசம் திறமான சிலேஷ்ம ரோகங்கள் தன்னோடு காலும்.
நீக்கியே உதிரத்தில் வாயு வெல்லாம் நீங்கிவிடும் நிமிஷத்தில் நினைவாய்ப் பாரே.

பாரப்பா புலத்தியரே மேகலைகை நீர்ப்பனம் பான மத்து மணி சொல்லக் கேளு
சேரப்பா அமுக்கிறா வேர் திறமாக ஒன்று பலம் பத்தாகும்
காரப்பா நீ வெப்பாலை வேர் பலந்தானைந்து தயவாகத் தன்னி முட்டான் பலந்தான் ரெண்டு
ஆரப்பா நன்னாரி சங்கு மூலம் அப்பனே திரிகடுகு திரிபாலையாமே.

ஆமப்பா லவங்கத் தோல் லவங்கப் பத்திரி அப்பனே சிறு நாகம் வாய் விளங்கம்.
போமப்பா மல்லி யிரு சீரகம் ஓமம் புகழான குருசாணி அரத்தை சேத்தும்
நாமப்பா சிறு தேக்கு கண்டங்காரி நலமான கொடிவேலி விளாமிச்சை மூலம்
தாமப்பா தக்கோலம் வால்மிளகு தனமான முந்திரிகை பெரிச்சிக் கூட்டே.

கூட்டடா வெப்பாலை தாமரை கிழங்கு குலமான சாதிகாய் சாதிபத்திரி
நாட்டடா கருவேம்பின் யிலை வகைக்கு நலமான பலமொன்று நிறுத்துக் கொண்டு
கொண்டடா இள வறுப்பாய்ச் சூரணித்து கருவான குங்குமப் பூ கோரோசனை கற்பூரம்
வாட்டடா களஞ்சி நிறை பொடித்துச் சேர்த்து வளமான சர்க்கரை சேர் நாலு வாங்கே.

வாங்கியே ஆவின் பால் படி தான் நாலு வளமான சர்க்கரையைக் கரைத்துக் கொண்டு
பாங்கியே பாகு பதமாகும் போது பாகராகவே சூரணத்தை யதில் கொண்டு
தேங்கியே ஆவின் நெய் யடியரை தான் வாரும் திரமான தேனதிலே படி காலப்பா
வாங்கியே மெழுகு போல் கிண்டி வாங்கு வழுமான பீங்கானில் பதனம் பண்ணே.

பண்ணப்பா இரு நேரம் பாகளவு கொள்ள பகருவேன் தீருகிற வியாதி தன்னை
உன்னப்பா கீர்த்தி யொடு சூலை தீரும் புழுமையாய் கண்டத்தில். மாலை தீரும்.
மன்னப்பா வாத மொடு வாயுவெல்லாம் நாடாது பிரமியங்கள் லிங்கப் புத்து
தன்னப்பா சேத்தும நோய் கொல்லுமத்தாம் கலைந்து போகுமடா பத்தியங் கேளே.

சௌபாக்கியச் சுண்டி:-

காரப்பா உலகத்தோர் நோய்களெல்லாம் கலக்குமடா சௌபாக்கியச் சுண்டி கேரு
நேரப்பா சுக்குத் தான் பலந்தானெட்டு நிலைவர்க மேல் தோலைச் சீவிப் போட்டு
சாரப்பா மொச்ச விரை பிரமாணந்தான் களமாக நறுக்கி மறு சட்டிக்குள்ளே
சேரப்பா செம்முள்ளி கச்சந்திரா யுந்தி ரமான முருங்கிலையுங் கருசாலையாமே.

ஆமப்பா சிறு செருப்புக் காந்த வெட்டி அப்பனே சாறு வகை படி காலங்கம்
நாமப்பா புதுச் சட்டி சுக்கில் விட்டு நலமாக வெவ்வேறாய் ரவி யுலர்த்தி
காமப்பா யிடித்து நன்றாய்ச் சூரணித்து கனமாக வடி கொண்டு அப்பால் வைத்து
காமப்பா கார்கோல் வாலுளுவை வித்து களமான கூகை நீர் கைப் பொளம் கட்டே.

கட்டு வாய் விளங்கம் கானிகாய் நெல்லி கருஞ சிப்பிலி மூலஞ் செவ்வியம்
நாட்டப்பா வகை யொன்று பலமரை தான் வாங்கி நலமாக இள வறுப்பாய்ச் சூரணித்து
காட்டப்பா அமுகிரா பொன் முசுட்டை கருவான கண்டங்கத்திரி நன்னாரி
நீட்டப்பா நிலப் பனையும் வகைக்கு ஒன்று நிலைவாகப் பலமிரண்டு நிறுத்திக் கொள்ளே.

கொள்ளப்பா சுத்தி செய்து இடித்து தூளாய் குணமாக வடி கட்டி வைத்துக் கொண்டு
விள்ளப்பா மூவகைத் தா நெய்யைக் கட்டி விடுங்கவே சர்க்கரையை வாங்கி
நள்ளப்பா ஆவின் பால் படி தான் ரெண்டில் நலமான சர்க்கரையை கலந்து கொண்டு
அள்ளப்பா அடுப்பேத்திப் பாககாலல் அப்பனே முன் தூளைக் கொட்டிக் கிண்டே.

கிண்டப்பா தாள் தாலி நன்றாய் கிண்டி கிருபையாய்ப் புது கலசந் தன்னிலடைத்து
ஏண்டப்பா விரல் கடித் தா லிரு நேரங் கொள்ள நல்மாகத் தீரும் நோய் கேள்
கண்டப்பா பிராணி வகை யெல்லாம், தீருங் கருவான கபமான பிரமியங்கள் ருசிக வாய்வு
கண்டப்பா வாதமொடு பித்தமெல்லாங் கல்லாடை கோடு மடா கண்டு கொள்ளே.

கொள்ளவே அதிரமா வாய்வு தீருங் குற்றுள வாயுரல் வாய் கசப்பு
கொள்ளவே வயக்கிறாள் வியாதி எல்லாங் குடிபோகுஞ் சௌபாக்கியச் சுண்டி யென்றுல்
கொள்ளவே பத்தியந் தான் புளி கசப்பு கூறுள புகையோடு பெண்ணுறுந் தள்ளே.

கூஷ்த பாண்ட லேகியம்:-

தள்ளவே கூஷ்த பாண்ட லேகியங் கேளு திளமான கூஷ்த பாண்டச் சாறு படி நாலு
விள்ளவே காழைமுட விழுதுச் சாறு விருதாகப் படி யொன்று தென்னம் பூ வொன்று
தள்ளவே பழத்தின் சாறு படி காலென்று களமான ஆவின் பால் படி தான் ரெண்டு
பள்ளவே சர்க்கரை தான் பலமும் பத்து பகராகே கரைத்தலைப் பாகு சேரே.

சேரப்பா சீரகமு மல்லிக் கோஷ்டம் திரமான மிளகு மாசிக்கா யேலம்
காரப்பா சாதிகாய் சாதிபத்திரி கருவான மரமொடு காசினிகான்
வாரப்பா வகை யொன்று பலமொன்றாக வகையாகச் சூரணித்துப் பாகில் தூவி
நேரப்பா தேன் நெய்யுமரைகான் விட்டு நிலைவாக லேகியம் போல் கிண்டி வாங்கே.

திப்பாக்கினிச் சூரணம்:-

தள்ளவே தீபாக்கினிச் சூரணந்தான் சொல்வேன் தளமான கொடிவேலி திரிகடுகு ஓமம்
விள்ளப்பா சிறு தேக்கு துனைத் திப்பிலியுங் கோஷ்டம் விளங்கிய தோர் வகை யொன்று
பலந்தானொன்று

நள்ளப்பா சர்யங்கால் வசம்பு கால் தான் நலமான கடுகு பொடியரைப் பலந்தான் கூட்டி
தெள்ளப்பா இள வறுப்பாய்ச் சூரணித்து திரமான சீனி காரங் கூட்டிக் கொள்ளே.

திருராகூத சூரணம் :-

கொள்ளவே விரல் கடிதான் வெந்நீரில் கொள்ள கூறுன கிராணி வகை யுதிர வாய்வு
பள்ளவே மகவாய்வு வாதமெல்லாம் பறக்குமடா திருதராகூத சூரணங் கொள்ள
தள்ளவே முந்திரிகை பேரிந்து பலந்தான் தாமான அதிமதுரம் முகாவே ஊ
நள்ளப்பா நெல்பொரியு முந்து காசும் நலமான ஏலமொடு கிராம்பு கூட்டே.

கூட்டுவாய் கொத்தமல்லி மிளகு வேலி கூறுன திப்பிலியுங் கூகை நீரும்
நாட்டுவாய் சாதிகாய் சாதிபத்திரி நலமான வால்மிளகு லவங்கப் பத்திரி
ஆட்டு வாய் வகையொன்று பலமொன்றுக அப்பனே சூரணித்து சர்க்கரையுங் கூட்டி
வெட்டவே விரல் கடிதான் தேனில் கொள்ள விருசாக்த் தீரும் நோய் விளம்பக் கேளே.

கேளப்பா அந்திர வாய்வு பாண்டு ரோகம் கெடியான காப சுரம் மயக்கந் தாகம்
வாளப்பா பித்த வகை நாற்பதுந் தான் வளமான அரோசிகங்கள் அன்ன கோஉஷம்
நாளப்பா உஷ்ண தேய் சிலேஷ்மங்கள் நலமான அக்கினியா மந்த வாய்வு
காளப்பா கை யெரிவு காந்தலெல்லாம் கலைந்து போகுமடா நெய்யில் கொள்ளே.

அசுவ கெந்தி சூரணம் :-

கொள்ளவே அசுவ கெந்தி சூரணந்தான் கேதுலமான லவங்க மொன்று நாகப்பூ ரெண்டு
தள்ளவே ஏலம் நான் மிளகு யெட்டு தளமான திப்பிலி ஈரெட்டுச் சுக்கு
வெள்ளவே முப்பத்திரண்டுங் கூட்டு விசையான அசுவ கெந்தி யறுபத்திநா
நள்ளவே சுத்தி செய்து உலர்த்திக் கொண்டு நலமான இள வறுப்பாய்ச் சூரணந் தான் செய்யே.

செய்யப்பா சமனுகச் சர்க்கரைக் கூட்டி திரமான ஆவின் பால் நெய்யில் கொள்ள
கையப்பா விரல் கடித்தான் கொள்ளும் போது கனமான மேகவகை யெல்லாம் போகும்
மெய்யப்பா அஸ்திர சுரம் வெட்டைப் போகும் மேலான சுவாச மொடு யீளைப் போகுந்
தய்யப்பா மேகத்தின் பாண்டு போகுந் தளமான சூர வெல்லாஞ் சாருதென்னே..

கண்டாத்திரிச் சூரணம் :-

சார்வாகக் கண்டத்திரி சூரணஞ் சொல்வேன் தருவான இஞ்சியது பலந்தான் பத்து
சேரவே மேல் தோலைச் சீவிப் போட்டு சிறு பயறு போல் நறுக்கி பழச் சாறாட்டி
காரவே நாளென்று ஊறப் போட்டு தவறாமல் மறுநாள் தான் ரவியுலர்த்தி
ஊரவே சீரகந்தான் பலந்தானென்று அப்பனே முன் போலப் பழச் சாறாட்டே.

ஆட்டியே மறுநாள் தான் காயப் போட்டு உத்தமனே முன் கொடுத்த தாளிச பத்திரி
நாட்டியே திப்பிலியு மேலங் கிராம்பு நலமான கோஷ்டமொடு வாய் விளங்கம்
வாட்டியே யிள வறுப்பாய்ச் சூரணித்து வளமான சர்க்கரை தான் சமனுய்க் கூட்டி
நீட்டியே விரல் கடிதான் நாள் கொண்டாயானால் நீங்கி விடு பித்த முதல் வாய்வு போமே.

போமப்பா அரோசிகங்களன்ன தோஷம் புகழான பித்த வெட்டை பொருமல் விம்மல்
நாமப்பா வாயுவோடு வாதமெல்லாம் நாடாது சூலையெல்லாம் நவினமாகுஞ்
சேமப்பா வையகத்திலுள்ள வியாதியெல்லாந் திறகாத தீருமடா பத்தியங் காக்க
நாமப்பா உலகத்தோர்க்காக யிறங்கிச் சொன்னோம் நலமான சூரணத்தை காட்டிப்பாரே.

தாளிச பத்திரி சூரணம் :-

நாட்டியே சொல்லுகிறேன் புலத்தியனே அய்யா நலமான தாளிசச் சூரணந்தான்
நாட்டியே தாளிச பத்திரி பலந்தான் பத்து கருவான திரிகடுகு திரிபலாதி
நீட்டியே கோஷ்டமொடு அக்கிராகாரம் நினைவாக அத்தி திப்பிலி சீரகங்
கூட்டியே கொத்தமல்லி வாய் விளங்கங் கூறுன கிராம் பேலஞ் சாதிக்காயே.

காயோடு பத்திரியும் மாத்திரைச் சோம்பு கருவான வால் மிளகு லவங்கப் பட்டை
காயோடு இவையெல்லாம் பலமொன்றாக தவறாமல் சூரணித்து வடித்துக் கொண்டு
தாயோடு சர்க்கரை தான் சமனாய்க் கூட்டித் திரமாகப் பிசைந்து கொண்டு விரல் கடிதானேரம்'

போமடா அஸ்தி சுரம் சத்தி வெட்டை பொருகாக நீர்தாகம் புண்ணும் நெஞ்சில்
நாமடா பித்த வெட்டை பித்த பாண்டு நாடாது கிராணி வகையெல்லாந் தீரும்
காட்டா கை எரிவு காலெரிவு அரோசிகங் களன்ன சோஉஷந் கவருக விம்மலோடு
விக்கல் கக்கல்
சாட கை யெரிவு காலெரிவு காந்தல் சாந்தமாம் புகையொடு புளியுந் தள்ளே.

<u>பஞ்ச தீபாக்கினி சூரணம்</u>:-

தள்ளவே பஞ்ச தீபாக்கினியான தளமான சூரணந்தான் சொல்லக் கேளு
விள்ளவே திரிகடுகு ஏலம் சீரகம் திகமான வகை யொன்று பலந்தானென்று
நள்ளவே இள வறுப்பாய்ச் சூரணித்து நலமாக வடி கொண்டு சர்க்கரைதான் சேர்த்து
தெள்ளவே விரல் கடிதான் தேன் நெய்யில் கொள்ள திறமாகத் தீரும் நோய். செப்பக் கேளே.

செப்புறேன் உஷ்ண நோய் சூலை வாய்வு சேர்ந்த பித்த வாய்வோடு சிலேஉஷ்ம ரோகம்
தப்புறேன் பொருமலோடு செரியா மாந்தந் தனமான மயக்கமொடு கிறுகிறுப்பு.
வெப்புறேன் அஸ்தி சுரம் சத்தி வெட்டை வேறான மூலத்தின் வியாதி தீரும்
நப்புரேன் புளி கசப்பு புகையுந் தள்ளு நலமான காந்தம் வைத்து நலமாய்க் கொள்ளே

<u>நிலவாகைச் சூரணம்</u>:-

நலமான சூரணந்தான் சொல்லக் கேளு நலமாக நிலவாகை சுக்குங் கூட்டி
பிளமான மிளகு வாய் விளங்க மோமம் பேரான வகைக்கு மொரு பலந்தான் ஆக்கி
சிலமாக ரவி முகத்திலுலரப் போட்டு சிதறு மலிடித்துச் சூரணஞ் செய்து
தலமான சர்க்கரை தான் சமனாய்க் கூட்டித் தவறுமலிரு நேரங் கொண்டால் கேளே.

கேளப்பா வாயு வென்ற தெல்லாம் போகுங் கெடியான பித்த மெல்லாம் கீழே
வாளப்பா விஉஷ்ண்ட நோயெல்லாந் தீரும் வளமான பொருமலோடு விம்மல் தீரும்
தாளப்பா சேத்தும தோயெல்லாந் தீரும் தளமான விக்கலொடு வாந்தி தீரும்
நாளப்பா உடம்பெரிவு சுவாச காசம் நன்றாகத் தீருமடா சாற்றக் கேளே.

சாத்துகிறேன் நீர்ப்றல் பல பேதங்கள் தள தளத்து வயறு விம்மல் இருமல் தீரும்
தேத்துகிறேன் குன்ம மெட்டும் மகோதரங்கள் தெளிவாக வாயுவெல்லாந் தீருந் தீரும்
மாத்துகிறேன் கெர்ப வலி கெற்ப ரோகம் ஆச்சரியப் புழுக்களெல்லா மகன்று போகுங்
காத்துகிறேன் வென்னீரில் கொண்டாயானால் கலங்காதே வயத்திலுள்ள வியாதி போமே.

<u>வல்லாரைச் சூரணம்</u>:-

போமப்பா வல்லாரைச் சூரணந்தான் கேளு புதுமையாய் வல்லாரை பாலில் போட்டு
நாமப்பா அவித்துலர்த்தி காயப் போட்டு நலமாகச் சூரணித்துப் பலம் பத்தானால்
தாமப்பா ~~சாதிக்~~ கிராம்பேலஞ் சாதிகாயுந் தளமான பத்திரியும் மாசிக்காயும்
தேமப்பா தாளிசந் திரிபலாதி திறமாக இள வறுப்பாய்ச் சூரணந்தான் செய்யே.

செய்யப்பா வகை யொன்று பலமொன்றாக திறமாக இரண்டு மொன்றாய்ச் சேர்த்துக் கொண்டு
பைய்யப்பா சர்க்கரைதான் சமனாய்க் கூட்டி பதறுமல் விரகல் கடிதான் நெய்யில் கொள்ள
தைய்யப்பா மேகமெல்லாந் தவறுண்டே போகுஞ் சாத்தில் காந்தி யெல்லாம் சாந்தமாகுங்
கைய்யப்பா பிரமியங்கள் கிரந்தி யெல்லாங் கனமான உஷ்ண நோய் காணுதென்னே

காணுது நீர்ப்றல் நீரழிவு தானுங் கண்ணெரிவு கண் புகைச்சல் காணுதோடுந்
தோணுது உடம்பெரிவு மூலச் சூடு சுறுகான நீர்ச் சூடு குளிர்ந்து போகும்
நாணுது மது மேகந் தந்தி மேகம் நாடாது சமய மேகம் நளினமாகுமே
கோணுது தேகமெல்லாங் குளிர்ச்சியாகும் கொண்டு வர அப்பிரகம் வைத்துக் கொள்ளே.

<u>சஞ்சீவிச் சூரணம்</u>:-

கொள்ளவே சஞ்சீவிச் சூரணந்தான் சொல்வேன் குணமான சீந்திலடித்தன்று வாங்கி
விள்ளவே மேல் தோலைப் போக்கிப் போட்டு வெறுளாதே நறுக்கியதை உலரப் போட்டு

கள்ளவே யிடித்து அதைச் சூரணித்து கருவாக வடிகொண்டு படிநாள் வாங்கி
நள்ளவே முன்னா த்திச் சுத்தி செய்து நலமான பொடி படிக்கு ஆவின் பால் படியே.

படியான அரைப்படி தான் சீனி போடு பாங்காக ரவி யுலர்த்திக் காய்ந்த பின்பு
வடிவாக உரலிலிட்டு இடித்துக் கொண்டு வப்பனே சாதிகாய் சாதிபத்திரி
கடியான வால்மிளகு ஏலம் கிராம்பு கசகசா, தாளிச மாசிகாயும்
வடிவாகி இள வறுப்பாய்ச் சூரணித்து வளமாக வகைக்கு மொரு பலந்தான் கூட்டே.

கூட்டியே ரெண்டு மொன்றாய் சேர்த்துக் கொண்டு குறையாமலாறு பலஞ் சீனி சேர்த்து
வாட்டியே விரல் கடி நாள் நெய்யில் கொள்ளநலமாகத் தீரும் நோய் நவிலக் கேளும்
தாட்டிகமா மேகமிருபதுந் தான் போகுந் தளமான தளமான பிரமியங்கள் மேக மெல்லாம்
வாட்டியே வத்தியதோர் மேகமெல்லாம் வளமாகு மஸ்கி சுர மந்தி வெட்டை போமே.

போமப்பா மூலத்தின் குடு போகும் பொல்லாத பித்த வகை யெல்லாம் போகும்
நாமப்பா கண்ணெரிவு கை கால் காந்தல் நாடாது தேக மெல்லாங் குளிர்ச்சியாகுந்
தாமப்பா வூரவெல்லாந் தவறுண்டே போம் தளமான கபாலி ரணங்கள் தீரும்
வேமப்பா வாலை ரசச் செந்தூரந் தான் வெகு சுருகாய் பண்விடை அப்பிரகங் கொள்ளே.

ஏலாதிச் சூரணம்:-

கொள்ளவே யேலாதிச் சூரணங் கேள் குலமான லவங்க மொன்று மிளகு ரெண்டு
விள்ளவே நாக மாறல் தாளிச மெட்டு விதமான சுகை பதினாறும்
நள்ளவே சுக்கு தான் முப்பத்திரண்டு நலமான ஏலம் அறுபத்திநாலுங்
கள்ளவே சர்க்கரை தான் சமமாய்க் கூட்டி கலந்து புது கலசமதில் பதனம் பண்ணே.

பண்ணியே வெருகடி தானிரு நேரம் கொள்ள பறக்குமடா பித்தமொடு வாத வாய்வு
தன்னியே கிரந்தி ரணமறி கிரந்தி தளமான மேகா ரலச் சொறி சிறங்கு
நன்னியே சில் விஷயங்கள் நாடாதோடும் நலமான குஷ்டமொடு குறை நோய் தீரும்
பண்ணியே பெரும் பாடும் எரும்புருக்கி பின் பாராதோடுமடா யின்ன மூன்றே.

அசுவ கெந்தி தைலம்:-

ஒன்றான உலகத்தோர் நோய்கட்கெல்லாம் உரைகிறேன் தைலமொன்று உசிதமாக
நன்றாக அசுவ கெந்தி தைல மென்ற நலமாக நாமமது நவிலக் கேளு
சென்றாக அசுவ கெந்தி பறுமஞ்சு சித்தாமுட்டி பதினைந்து வகை நரம்
ஒன்றான நன்னாரி சீந்தி விளாமிச்சை கோரையுடன் நெயிச்சிட்டி அவிரி யென்னே.

என்னவே நார்த்தைத் துளசி வெட்டி இதமான வகை மூவகை பலந்தானது
நன்னவே அகில் நாலு தேவதாரி நாலுநலமான கீழ் நாடன் பலந்தானெட்டு
தன்னவே கொம்பரக்குப் பலந்தானெட்டு தள்ளி வெட்டு வகை எல்லாம் பதினைந்தாகும்
என்னவே இடித்து நன்றாய் நானி நீரில் ஒரு விரகாய்த் தீயிட்டு சேர்த்தொன்றுக்கே.

ஆக்குவா யெள்ளெண்ணைச் சேர்தானைந்து அதில் பாதி தயிர் தாரு பால் சேரைந்து
ஆக்குவாய் கற்க வகை மருந்து கேளு தனியான திரிகடுகு திரிபலாதி
மாறங்கம் கஸ்தூரி மதுரம் கோஷ்ட மாஞ்சில் முச்சீரகம் புச்சாந்து கெந்தகம்
பாக்கும் மரமஞ்சள் ரோகணி செவ்வள்ளி பச்சைப் பூலா மூலம் கிளி யூரல் கூட்டே.

கூட்டுவாய் சதகுப்பை பரங்கிப் பட்டை கூரேலம் வகைக்கு மரைப் பலமதாக
ஆட்டு ஆவின் பால் விட்டு நன்றாய் அப்பனே கசாய மெண்ணை தனில் கரைத்து
நாட்டுவாய் யடுப்பேத்தி கொதிக்கும்போது நலமான முன்னிரக்குங் கசாயம் விட்டு
மூட்டுவாய் முப்பீத்தில் முதிராமல் தான் முன்னவற்குப் பூசித்து வடித்திடாயே.

வடித்திட தைலமது முழுதும் போது வாகாசி தீருகிற வியாதி கேளு
பிடித்திட மேக சூலை பதினெட்டு பேரான வாதத்தின் சூலை தாமும்
அடித்திட பித்த சுரமான்டு போகும் வாகான குன்ம மெட்டும் மரணமாகும்
அடித்திட்டுச் சுண்மடா வெட்டை யெல்லாம் அனுகாத அக்கினியா மந்தந்தானே.

மந்தமொடு பாண்டு வகை யெல்லாம் போகும் மைந்தனே கண் புகைச்சல் கை கால் காந்தல்
பெந்தமா முடம்பெரிவு சுவாச காசம் பின் பற்றோடு மடா மேகமெல்லாம்
பந்தமாம் பத்தியந்தான் புளி கசப்பு பாங்கான புகையொடு பெண்ணுந் தள்ளே
இந்த வகை சொல்லார் இகத்திலுள்ளோர் பிழைக்க வென்று யிறங்கிச் சொன்னார்.

<u>வில்வாதித் தைலம்</u>:-

இறக்கினேன் தைலமொன்று சொல்லக் கேளு இயல்வான வில்வாதி என்ற நாமம்
பரங்கியே வில்வமொன்று விளாமிச்சைக் கோரை பாங்கானசஞ்சீவி வகை யொன்றுக்கு
தாங்கியே கீழ்வுடன் பலந்தானெட்டு தானடித்து முக்தானி நீரில் போட்டு
வாங்கியே சேர் பாசத் தொன்டுயக் காய்ச்சி அப்பனே கொம்பரக்கு சேர்தான் ரெண்டே.

ரெண்டான சாணி நீரெடொன்றுக்கி நிலையான எள்ளெண்ணை ஐஞ் பலந்தானைந்து
குன்றுன ஆவின் பால் படி தானைந்து குலமான கற்க வகை சொல்லக் கேளு
நன்றான திரிகடுகு திரிபலாதி நலமான கஸ்தூரி மதுரங் கோஷ்டம்
கன்றான யிரு சீரகமு மாஞ்சில் மஞ்சள் கருது கெந்தங் கிளியூரல் புஞ்சாந் தெள்ளே.

என்னவே செவ்வள்ளி லவங்கப் பட்டை இதமான பச்சையொடு பூலா ஏலம்
பன்னவே வகை யொன்று பலந்தான் வாங்கி பாங்கான ஆவின் பால் விட்டு ஆட்டி
முன்னவே கசாய மெண்ணை தனில் கரைத்து போகமா யடுப்பேத்தி கமலமாக
அன்னவே முதிராமல் மெழுகு பதமானல் கணபதியைப் புசித்து வடித்திடாயே.

வடித்திட தயிலமது முழுகும் போது வாகாகத் தீருகிற வியாதி கேளும்
பிடித்திட மேக்ந்தானிருபதுமே போகும் பேரான பித்த வகை நாற்பதுமே போகும்
நடித்திட குன்ம மெட்டுந் தொலைந்து போகும் தொலையாத சுரமேய் சொல்லாதோடும்
கடித்திட்ட மேகத்தின் வரகூடியெல்லாங் கண் காணதோடுமடா கருதிப் பாரே.

<u>குமரித் தைலம்</u>:-

கருதியே நீ கேளும் புலத்தியனே அய்யா கருவான குமரியுட தைலஞ் சொல்வேன்
விருதான குமரிச் சார் படி தான் ரெண்டு வெள்ளாட்டின் பாலது தான் படி தான் ரெண்டு
சருதியா மெள்ளெண்ணை படிதான் ரெண்டு சாற்றுகிறேன் கற்க வகை திரிகடுகு கோஷ்டம்
மருவான மாஞ்சிலொடு திரிபலையுஞ் சீரகமும் மதுர மொடு பூஞ் சாத்து வங்கங் கெந்தந்
தென்னவே ரோகணியுஞ் செண்பக பூவாளை திப்பிலியும் மஞ்சட்டி சோம்பு மஞ்சள்
பன்னவே வகை யொன்று பலமரை தான் வாங்கி பரிவான ஆவின் விட்டு ஆட்டே.

ஆட்டியே கரைத்தனைச் சாத்திஅள்ளே அப்பனே அடுப்பேத்திக் கமலமாக
மூட்டியே மெழுகு பதமாகவே தான் முதிராமல் வடித்ததனைச் சீசாவிலிட்டு
நாட்டுவாய் தானியத்தில் வைத்து மூடி நலமான மண்டலங் கால் சென்ற பின்பு
தாஊந்டிகமாய் மண்டலந்தான் முழுகும் போது சாதகமாய்த் தீருகிற நோய்க் கேளே.

கேளடா மேகமெல்லாந் தொலைந்து போகுங் கெடியான அஸ்திர சுரம் வெட்டை போகுந்
தாளடா ரத்த பித்த சாந்தமாகுஞ் சரீரத்தில் வறட்சி முதல் ஊறல் போகும்
கேளடா குன்ம மெட்டும் பாண்டு ஆறும் வெளுப்பான தேக மெல்லாம் வண்டு போலாம்
வாளடா வைத்தியர்க்கு இத் தைலஞ் சொன்னேன் மகத்தான மனமுடையோர் நினைந்து பண்ணே.

<u>கொம்பரக்குத் தைலம்</u>:-

மகிழவே கொம்பரக்குத் தைலம் கேளு மகத்தான கொம்பரக்கு பலந்தானெட்டு
நிகழவே சாணி நீரெண்டொன்றுக்கி நிஜமாகத் தாளிக்குள் வடித்து விட்டு
திகழவே எள்ளெண்ணை சேர் தானைந்து திறமான தயிரிரெண்டு பால் சேரைந்து
நாளவே காடியது சேர்தான் ரெண்டு நறான கற்க வகை சொல்லக் கேளு.

கேளப்பா சதகுப்பை கடுகுரோகணி கிளியூரல் புஞ்சாந்து பச்சைப் புலா
நாளப்பா செவ்வள்ள லவங்கப் பத்திரி நலமான லவங்கத் தோல் மாஞ்சில் கோஷ்டம்
தாளப்பா கஸ்தூரி மதுரங் கெந்தகம் தயவான யிரு சீரகம் வசுகு ஏலம்
ஆளப்பா வகை யொன்று காஞ்சி யொன்று அப்பனே ஆவின் பால் விட்டு ஆட்டே.

ஆட்டுவா யெண்ணை பாலதனில் கரைத்து அடுப்பேத்தி மெழுகு பதமான வாரில்
நாட்டியே வடித்ததனை தலை முழுகும் போது நலமாக தீருகிற வியாதி கேளு
தாட்டிகமாய் அஸ்தி சுரம் பித்த வெட்டை போகும் தலை மயக்கம் வாயூறல் சாந்தமாகும்
வாட்டியே சீத சுரம் மாண்டு போகும் வத்திய கோர் தேகமெல்லா மூறும் பாரே.

******

முற்றும்

******

சு.சு. 28.2.63.